மலர்-3 இதழ்-65 மே 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play




## தாய்க்கு கடமை செய்த மகான்கள்

## முருகன் வரலாற்றை படித்த ராமன்-லட்சுமணன்



# சிவனே என்று இருப்பதின் பொருள்

- எந்த ஒரு சூழ்நிலையிலும் திருப்தியாக இருப்பது என்று பொருள்
- தன்னிடம் வருபவர்களின் மனதை அமைதி அடைய வைப்பது என்பது பொருள்
- ஏகாந்தத்தை அனுபவிப்பது என பொருள்
- சதாகாலம் அவரையே நினைத்திருப்பது என்பது பொருள்
- எந்த ஒரு சூழ்நிலையிலும் நிம்மதியாக இருப்பது என்று பொருள்
- தன்னால் பிறரும் பிறரால் தானும் துக்கமடையாத நிலை என பொருள்...
- உலகீய பொருட்களில் சார மில்லை சிவமே
- இன்பம் என நிலைத்திருப்பதாக பொருள்...
- இப்படி பரம்பொருளான தந்தை ஈசனை என்றும் நினைத்து அவர் சிந்தனையிலேயே மூழ்கி இருப்பது ஒன்றே சிவனே என்றிருப்பது என பொருள்படும்.
- மனம் அமைதியாக இருப்பது என்று பொருள்
- வீணான எண்ணங்களிலிருந்து விடுபட்டிருப்பது என்று பொருள்
- கவலையிலிருந்து விடுபட்டிருப்பது என்று பொருள்
- எல்லாப் பொறுப்பையும் அவரிடம் கொடுத்தாகிவிட்டது என்று பொருள்
- எல்லாம் நன்மைக்கே என்று பொருள்
- எதனாலும் குழப்பமடையாத நிலை என்று பொருள்
- ஆடாத, அசையாத நிச்சய புத்தி உடைய மனம் என்று பொருள்
- மனம் லேசாகவும், முகம் மலர்ந்திருக்க வேண்டும் என்பது பொருள்

அதிகாலை நாலரை மணி முதல் ஆறு மணிக்குள் தீபம் ஏற்றுவதாலும், மாலை ஐந்தரை மணி முதல் ஆறு மணிக்குள் தீபம் ஏற்றுவதாலும் நிறைவான வளமும், பலன்களும் நிச்சயம் கிடைக்கும்.

ஓம் என்ற மந்திரத்தை பூஜை அறையில் பத்மாசனத்தில் அமர்ந்து ஒருவர் தொடர்ந்து கூறி தியானம் செய்து வந்தால் அவரை எப்பேர்ப்பட்ட வினைப்பயனும், வியாதியும் நெருங்காது.

வீட்டில் பூஜை அறையில் தெய்வப் படங்களுடன் மறைந்த மூதாதையர் படத்தை சேர்க்காமல் தனியாக வைத்து வணங்கினால், சிறந்த பலன் கிடைக்கும்.



கஷ்டங்கள் நீங்க நினைத்தது நடக்க எளிய வழி தீபம் ஏற்றுவதுதான் தீப ஒளி இருக்குமிடத்தில் தெய்வ அணுக்கள் நிறைந்திருக்கும். வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தீபம் ஏற்றி வைக்கலாம்.

❖❖❖

தீபத்தில் உள்ள எண்ணெய் தான் எரிய வேண்டுமே தவிர திரி அல்ல. திரி எரிந்து கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

❖❖❖

விளக்கை ஏற்றும்போது வீட்டில் பின் வாசல் இருந்தால் அதன் கதவை சாத்தி விட வேண்டும்.

# கணபதியின் சிறப்பு

- காரைக்குடி அருகே உள்ள மாத்தூரிலும், சிவகங்கை மாவட்டம் பி.அழகாபுரியிலும் ‘கலங்காத கண்ட விநாயகர்’ கோயில்கள் உள்ளது. கடன் பிரச்னையால் வாடுபவர்கள் இவர்களிடம் முறையிட கடன் பிரச்னை தீரும்.
- கோவை மாவட்டம் நெகமம் அருகிலுள்ள தேவனாம்பாளையத்தில் உள்ள அமணீஸ்வரர் கோயிலுள்ள அம்பாள் பாதத்தின் கீழ் உள்ள சதுர் விநாயகர்களை வணங்கினால் தாய், பிள்ளைகளுக்கு இடையேயான மனக்கசப்பு தீரும்.
- தேனி மாவட்டம் கம்பம் அருகிலுள்ள சுருளி மலை அருவியின் அடிவாரத்திலுள்ள பூத நாராயண பெருமாள் கோயிலில் தனிச்சந்நதியில் ‘கால் நடைகளைக் காக்கும் கணபதி’ உள்ளார். பால் சுரப்பதில் குறைபாடு இருந்தாலோ இவரை வேண்டிக்கொள்ள குணமாகும்.
- சென்னை திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலுள்ள ‘மும்முடி விநாயகரை’ வேண்டிக்கொள்ள முன்னோர்கள் ஆத்ம சாந்தி அடையும். நினைத்த பேறுகளையும் அடையலாம்.
- உடுமலைப்பேட்டையிலுள்ள பிரசன்ன விநாயகர் கோயிலில் உள்ள மேற்கூரையில் 12 ராசிகளைக் குறிக்கும் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நின்று விநாயகரை வணங்கினால் அவரவர் ராசியில் ஏற்படும் தோஷங்கள் நீங்கும்.





ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 மே 2019 3
www.aanmeegamalar.com



# மனித கடன்கள்

மனித பிறவி என்பதே, முன்ஜென்மத்தில் நிறைவேறாத ஒருசில கடனை அடைக்க இறைவனால், மனிதர்களுக்கு கொடுக்கப்படும் ஒருவித தண்டனைதான் என்பதை நம் முன்னோர் பல வழிகளில் விளக்கியுள்ளனர்.

இதனை போக்க வேண்டித்தான் பல இறை அடியார்கள் "இனி பிறவா வரம்" வேண்டும் என்று இறை சிந்தனையுடன் தங்கள் வாழ்நாள் கடனை தீர்த்து வெற்றியும் பெற்றுள்ளனர்.

இவ்வாறு பிறவி என்பதை ஒரு சிலர் வரமாக நினைத்து, மற்றவரை வருத்தி, அவர்கள் சுகமாக வாழ்க்கையை நடத்தி மீண்டும் மடிந்து விடுகின்றனர்.

இது கால ஓட்டத்தில் நாம் கண்கூடாக பார்க்கும் ஒரு நிகழ்வு என்றாலும், பிறக்கும் ஒவ்வொருவரையும் இறைவன் படைத்த காரணத்தை அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

பிறவி என்பதே முன்ஜென்ம கடனை நிறைவு செய்ய கொடுக்கப்பட்ட தண்டனையாக இருந்தாலும், ஒவ்வொருவரும் பிறக்கும் போது கூடவே ஐந்துவகை கடன்கள் நம்முடன் சேர்ந்தே வரும், அவசியம் அந்த கடனையும் நிறைவேற்றியே தீரவேண்டும்.

முன்ஜென்ம கடனுடன் இந்த கடனை அடைக்கும் ஒவ்வொருவரும் மனித பிறவியிலிருந்து எளிதாக மீண்டு அடுத்த நிலைக்கு செல்ல உதவும்.

அந்த ஐந்து வகை கடனை நாம் வரிசையாக பார்ப்போம்.

## முதற்கடன்

தேவர்களுக்குக் கடன்பட்டுள்ளோம். நாம் சுவாசிப்பதற்கு காற்று, பார்ப்பதற்கு வெளிச்சம், பருகுவதற்கு நீர் என நமது எல்லாத் தேவைகளையும் தேவர்கள் நமக்கு வழங்குகின்றனர். நமது உடலின் ஒவ்வோர் அங்கமும் அசைவும் பல்வேறு தேவர்களால் கட்டுப்படுத்தப்படுவதால், நாம் முப்பத்து மூன்று முக்கோடி தேவர்களுக்கும் கடன்பட்டுள்ளோம். தேவர்களின் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு யாகங்கள் புரிய வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் தற்காலத்தில் தேவர்களுக்கான கடனை அடைப்பதைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை.

## இரண்டாவது கடன்

நாம் ரிஷிகளுக்குக் கடன்பட்டுள்ளோம். வியாஸதேவர், பராசரர், நாரதர் போன்ற மகரிஷிகள் நமக்கு தர்ம சாஸ்திரம், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற வேத சாஸ்திரங்களை வழங்கி உள்ளனர். வேத சாஸ்திரங்களைப் படிப்பதன் மூலம் ரிஷிகள் திருப்தி அடைகின்றனர். பொதுவாக கலியுக மக்கள் வேத சாஸ்திரங்களை வயதான காலத்தில் படிப்பதற்குக்கூட தயங்குகின்றனர்.

## மூன்றாம் கடன்

பித்ருக்களுக்குக் கடன்பட்டுள்ளோம். நாம் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் மூதாதையர்களின் ஆசியால் பிறப்பெடுத்த காரணத்தினால் அவர்களுக்கு கடன்பட்டுள்ளோம். அவர்களுக்கு சிரார்த்த சடங்கு சரிவர செய்வதாலும் சந்ததியர்களை வாழையடி வாழையாகத் தழைக்க வைப்பதாலும் மூதாதையர்கள் திருப்தி அடைகின்றனர். இதனை பித்ரு யாகம் என அழைப்பர், பித்ரு லோகத்தில் மூதாதையர்கள் இன்பமாக வாழ்வதற்கு இதுவே உதவுகிறது. சிரார்த்த சடங்கு செய்யாத பட்சத்தில் மூதாதையர்களின் சாபத்தினால் குடும்ப விருத்தி தடைபடுகிறது.

## நான்காவது கடன்

மனிதர்களுக்குக் கடன்பட்டுள்ளோம். தாய் தந்தை சகோதரர் சகோதரி சேவகன், கணவன், மனைவி, குழந்தைகள் என பலரிடமிருந்து நாம் சேவையை ஏற்பதால், அவர்கள் அனைவருக்கும் கடன்பட்டுள்ளோம்.

அதே சமயம் விருந்தினர்களைக் உபசரித்து, மற்றவர்களையும் அந்த சேவையில் ஈடுபடுத்தும் போது விருந்தினர்கள் திருப்தி அடைகின்றனர். இதனை நிர் யாகம் என அழைப்பர்.

எதிரியே இல்லத்திற்கு விருந்தினராக வந்தாலும், அவருக்கு விருந்து படைக்க வேண்டும் என்று நம் முன்னோர் கூறியதன் காரணம் இதுதான், இதைத்தான் நம் முன்னோர் பண்பாடு என்ற ஒன்றுக்குள் மறைத்து வைத்தனர்.

## ஐந்தாவது கடன்

இதர உயிர்வாழிகளுக்குக் கடன்பட்டுள்ளோம். உதாரணமாக, பசுவிடம் பால் அருந்துவதால், பசுவிற்கு நாம் கடன்பட்டுள்ளோம். விவசாயத்திற்கு எருதின் சேவையை ஏற்கிறோம்.அதைப் போன்று மற்ற விலங்குகளிடமிருந்து பல சேவைகளை ஏற்கிறோம் அந்த ஜீவன்களின் சேவையைப் போற்றுதல் பூத யாகம் எனப்படுகிறது.

மேற்கண்ட ஐந்து வித கடன்களையும் நாம் இப்பிறவியிலேயே முன்ஜென்மக் கடனுடன் சேர்ந்து அடைக்க வேண்டும்.

# அறிவியல் யுகமென நாத்திகர்கள் ஆட்டம் போடலாம் கடவுள் நம்பிக்கையாளர்கள்தான் அறிவியலை உருவாக்கினர்

1979–ம் வருடம்.. திருவனந்தபுரம் கடற்கரை ஓரத்தில் பெரிய மனிதர் தோரணையில் இருந்த ஒருவர் அமர்ந்து பகவத்கீதையை படித்து கொண்டிருந்தார்..

அப்போது நாத்திக இளைஞன் ஒருவன் அருகில் வந்து அமர்ந்தான்..

அந்த வயதானவரை பார்த்து இந்த விஞ் ஞான உலகில் முட்டாள்கள் தான் இந்த பழம் பஞ்சாங்கமான பகவத் கீதையை படிப்பார்கள் என கிண்டல் செய்தான்.

இதை படித்த நேரத்தில் அறிவியலை கற்றிருந்தால் இன்னேரம் நீங்கள் உலகப்புகழ் அடைந்திருக்கலாம் என்றான்...

அந்த வயதானவரோ, தம்பி நீ என்ன படித்திருக்கிறாய் ? என்றார்..




இளைஞன், நான் கொல்கத்தாவில் படித்து அறிவியல் பட்டதாரி ஆனேன். தற்போது பாபா அணு ஆராய்ச்சி கழகத்தில் ஆராய்ச்சி படிப்பில் சேர்ந்துள்ளேன் என்றான்.

நீங்களும் இப்படி வீணா கீதையை படித்து பொழுதை கழிப்பது விடுத்து அறிவியல் ஆராய்ச்சி யில் ஈடுபடலாமே என்றான்.

பதில் பேசாமல் சிரித்து கொண்டே அந்த முதியவர் எழுந்தும் எங்கிருந்தோ வேகமாக நாலு பாதுகாவலர்கள் ஓடி வந்து அவரை சுற்றி நின்றனர். விலையுயர்ந்த கார் ஒன்று மெல்ல உருண்டு வந்து அவர் பக்கத்தில் நின்றது..

அதிர்ந்து போன இளைஞன் ஐயா நீங்கள் யார் என்றான்.

அதற்கு அவரோ சிரித்து கொண்டே நான் விக்ரம் சாராபாய். பாபா அணு ஆராய்ச்சி கழகத்தின் தலைவர் என்றார்.

அந்த நேரத்தில் 13 பாபா அணுமின் நிலை யங்கள் இயங்கி வந்தன. அத்தனைக்கும் தலைவர் இவரே.

இப்பொழுது அதிர்ந்து போன இளைஞன் தடாலென சாராபாய் கால்களில் விழுந்தான்.

சாராபாய் சிரித்து கொண்டே கூறினார்...

தம்பி. ஒவ்வொரு படைப்பின் பின்னும் ஒரு படைப்பாளி இருக்கிறான்.

அது மகாபாரத காலமாக இருந்தாலும் சரி. இந்த விஞ்ஞான யுகமாக இருந்தாலும் சரி. கடவுளை மறக்காதே. இன்று நாத்திகர்கள் அறிவியல் யுகமென ஆட்டம் போடலாம்.

ஆனால் வரலாறு சொல்லும். அறிவியலை உருவாக்கியது கடவுள் நம்பிக்கையாளர்கள் தான் என்று. இறைவன் என்பது ஒரு முடிவில்லா உண்மை. பரந்தாமனின் மொழிகள் (கீதை) உண்மையானவை. அதை வணங்கி பாருங்கள். துன்பம் தொலைந்தோடுவதை காண்பீர்கள் என்றார்.

God is the Eternal Truth. God's speech (Bhagavad Gita) is true; it cannot be falsified at all. Just by worshipping it, troubles will surely get resolved.

நன்றி: ஆன்மிகச்செய்திகள்






புதிய பொலிவுடன்

Aanmeegamalar
(mobile app)

ஆன்மிகமலர் .காம்



வழிபாட்டுத் தலங்களைப் பற்றி குறிப்புகள்

YouTube

அற்புத வண்ணமயமான ஆன்றோர் தத்துவங்கள்

பலன், பரிகாரம், ஜோதிடப் பலன்கள்

போன்ற புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது

GET IT ON Google Play

பயன்படுத்தி

புதிய mobile app டவுன்லோடு செய்து மேற்கண்ட பகுதிகளை படித்து பயன் பெறுங்கள்

ஆன்மிகமலர் .காம்

# அனந்த பத்மநாபசுவாமி உருவான வரலாறு

வில்வ மங்கலத்துச் சாமியார் என்று ஒருவர் இருந்தார். தினமும் பெருமாளுக்குப் பூஜை செய்து வந்தார். அந்நேரத்தில் பெருமாள் ஒரு சிறுவன் போல வந்து சாமியாருக்கு தொந்தரவு கொடுப்பார். சாமியாரை பூஜை செய்ய விடாமல் அவர் வைத்திருந்த பூக்களை சிதறிவிட்டும் அவர் மீது ஏறி விளையாடியும் அவர் தாடியைப் பிடித்து இழுத்தும் பூஜை பாத்திரங்களை தட்டிவிட்டும் பெருமாள் உன்னிகிருஷ்ணனாக (சிறுவன் கண்ணனாக) லீலைகள் செய்து வந்தார். ஆனால் கண்ணன்தான் தன்னுடன் விளையாடும் பிள்ளை என்பதை அவர் அறியவில்லை.

இவ்வாறு அந்த சாமியாரின் சகிப்புத்தன்மையை பெருமான் சோதித்தார். ஒரு நாள் சாமியாரின் பொறுமை சென்றுவிட்டது. சிறுவனை நோக்கி,” தொந்தரவு செய்யாதே” என்று அதட்டி பிடித்துத் தள்ளி விட்டார்.

“நான் உன்னை சோதிக்க வந்த கண்ணன்! இனி உன் முன் வரமாட்டேன். என்னைக் காண வேண்டுமென்றால் அனந்தன் காட்டிற்கு வா!” என்று கூறி கண்ணன் மறைந்து விட்டான்!

தம் தவறை உணர்ந்த சாமியார், அனந்தன் காடு எங்கிருக்கிறது என்று தெரியாமல் திகைத்து விட்டார். அதைத் தேடிப் புறப்பட்டார். பல நாட்கள் அலைந்து திரிந்தும் காட்டை கண்டுபிடிக்க முடியவில்லை. பலரிடம் கேட்டும் அனந்தன் காடு எங்கிருக்கிறது என்று தெரியவில்லை.

அப்படி ஒரு நாள் காட்டைத் தேடி அலைந்து கொண்டிருந்தபோது ஒரு மரத்தின் நிழலில் தாகத்துடன் அமர்ந்தார். அருகில் ஒரு குடிசை வீடு இருந்தது. உள்ளிருந்து சண்டை குரல் கேட்டது. ஒரு ஆண் குரலானது,” அடியே! என்னிடம் சண்டை போட்டால் உன்னை அடித்து அனந்தன் காட்டில் எறிந்து விடுவேன்!” என்று மிரட்டியது.

அனந்தன் காடு என்ற பெயரைக் கேட்டவுடன் மகிழ்ச்சி அடைந்த சாமியார், உள்ளே சென்று கணவன், மனைவி இருவரையும் சமாதானம் செய்தார். அவர்களிடம் அனந்தன் காட்டை பற்றிக் கேட்டார். அந்த வாலிபன் அனந்தன் காட்டை அடையாளம் காட்டினான்.

அந்த காட்டில் கல்லும் முள்ளும் மண்டி கிடந்தன. கண்ணனைக் காணும் ஆவலில் அவற்றைக் கடந்து சாமியார் சென்றார். இறுதியில் கண்ணனைக் கண்டார். ஆனால்,



அப்பொழுது பெருமாள் (உன்னி கிருஷ்ணன்) சின்ன கண்ணனாக இல்லாமல், ஸ்ரீதேவி பூதேவி இருவருடனும், அனந்தன் என்ற பாம்பு மீது மகாவிஷ்ணுவாகப் பள்ளி கொண்டிருப்பதை கண்டார். மகிழ்வு கொண்டு அவரை வணங்கினார்.

எம்பெருமானின் தரிசனத்தை கண்டபின்பு திருவிதாங்கூர் மன்னரிடம் பெருமாளை தரிசனம் செய்த நிகழ்வை கூறினார்.

பெருமாள் மீது பக்தி கொண்ட மன்னர் அந்த இடத்தில் அனந்த பத்மநாபனுக்கு ஓர் அழகான கோவிலை கட்ட ஏற்பாடு செய்தார். அக்கோவிலில் அனந்தன் என்ற பாம்பு மீது பள்ளி கொண்ட பெருமாளின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இவ்வாறு உருவானதுதான் பத்மநாபஸ்வாமி கோவில்.

108 திவ்ய தேசங்களில், இக்கோவில் 76–ஆவது திவ்ய தேசம் ஆகும். பெருமாள் 12,000 சாளக்கிராம கற்களால் ஆனவர். பெருமாளின் திருமேனி 18 அடி நீளம் கொண்டது.

இத்திருக்கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் யோக நரசிம்மர் வீற்றிருக்கிறார்.

ஹனுமான் பெருமாளின் சன்னதிக்கு முன்பு வீற்றிருக்கிறார். இத்திருத்தலத்தில் அனுமன் மீது சாத்தப்படும் வெண்ணெய் எப்பேர்பட்ட வெயில் காலங்களிலும் உருகுவதில்லை.

கிருஷ்ணர் பெருமாளின் சன்னதிக்கு பின்பு வீற்றிருக்கிறார். தெற்குப் பக்கத்தில் லட்சுமி வராகர் கோவிலும் ஸ்ரீநிவாசர் கோவிலும் இருக்கின்றன.

மூல விக்ரகம் முதலில் இலுப்பை மரத்தில் செய்யப்பட்டதாக இருந்தது. கிபி 1686–இல் அது தீப்பிடித்து எரிந்தது. பிறகு 12 ஆயிரம் சாளக்கிராம கற்களை கொண்டு புதிய சிலை உருவாக்கப்பட்டது. அனந்தன் மீது பள்ளி கொண்ட அனந்த பத்மநாப சுவாமி விக்ரகத்தின் மேனி முழுவதும் தங்கத் தகட்டால் அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது.

குழந்தை பாக்கியம், கல்வியில் சிறப்பு பெறவும், திருமணத் தடை நீங்கவும் பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்து வஸ்திரம் சாற்றி வேண்டிக்கொள்கின்றனர்.


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 மே 2019 9
www.aanmeegamalar.com

# ஓம் நமசிவாய

## ஒரு மணி நேரம் கூறினால் ஏற்படும் நன்மைகள்






- நீங்கள் மௌன விரதம் இருப்பதாகிறது,
- ஒரு மணி நேரம் நீங்கள் இறைவனுக்கு சம்மதமாக வாழ்ந்ததாகிறது,
- ஒரு மணி நேரம் ஹரிச்சந்திரன் போல் உண்மையை பேசியதாகிறது,
- ஒரு மணி நேரம் நீங்கள் உங்கள் மரணம் என்கிற பரிக்ஷைக்கு தயார் செய்தீர்கள் என்று ஆகிறது,
- ஒரு மணி நேரம் பூஜை செய்ததாகிறது,
- ஒ ரு மணி நேரம் உங்கள் பாவத்தை போக்கி கொள்ள பிராயசித்தம் செய்த தாகிறது,
- ஒரு மணி நேரம் இறைவனை நோக்கி சில படிகள் முன்னேறியதாகிறது,
- ஒரு மணி நேரம் வேதம் ஓதுவதாகிறது,
- ஒரு மணி நேரம் பெரியோர்கள் சொல் பேச்சு கேட்டதாகிறது,
- ஒரு மணி நேரம் நீங்கள் பக்தராகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் நீங்கள் மஹான்களால் ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் உங்கள் புலன்களை ஜெயித்தவர்கள் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் தியானம் செய்தவர் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் சமாதியில் உள்ளவர் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் ஒழுக்கமானவனாக ஆகிவிடுகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் றிஷீஃவீமீ'வீஸ்மீ ஆக இருக்கிறீர்கள்,
- ஒரு மணி நேரம் உங்கள் போலித் தனமான வாழ்க்கையில் இருந்து விடுதலை அடைகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் பாண்டுரங்கன் உங்கள் கையை பிடித்துக்கொண்டு இருக்கிறான்,
- ஒரு மணி நேரம் நீங்கள் பாதுகாக்கப்படு கிறீர்கள்,
- ஒரு மணி நேரம் உங்களுக்கு தெரியாமல் உங்களை கோவிந்தன் ரசித்துக்கொண்டு இருக்கிறான்,
- ஒரு மணி நேரம் மஹான்கள் வாயில் வந்த நாமத்தை நாமும் சொல்வதால் அவர்களுடைய பிரசாதத்தை உண்ட வர்கள் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் யாகம் செய்தவர் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் பகவானையே நீங்கள் கடனாளி ஆக்குகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் நீங்கள் கங்கையில் குளித்தவர் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் யமுனையில் குளித்தவர் ஆகிறீர்கள்,
- இந்த ஒரு மணி நேரத்தினால் இறைவன் நீங்கள் செய்த தவறுகளை மறந்து நிற்கிறான்,
- ஒரு மணி நேரம் காவிரியில் குளித்தவர் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் பிருந்தாவன மண்ணில் உருண்டு பிரண்டவர் ஆகிறீர்கள்,
- ஒரு மணி நேரம் கோடி கோடியான புண்ணியத்தை சம்பாதிக்கிறீர்கள்,
- எல்லாவற்றிர்க்கும் மேல் நாமம் வேறு இல்லை பகவான் வேறு இல்லை...
- அந்த ஒரு மணி நேரம் இறைவனே உங்கள் நாக்கில் எச்சில் பட்டு கட்டுண்டு இருக்கிறான்...
- பாக்கியம் செய்திருந்தால் மட்டுமே இறைவன் திரு நாமம் சொல்ல முடியும்...

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்



# செல்வ செழிப்பாக வாழ தாந்திரீக பரிகாரங்கள்...

இறைவனுக்கு வெற்றிலை பாக்குவைத்து வணங்குவது நமது மரபு. தாம்பூலம் எனப் படும் வெற்றிலைக்கு ஜீரணத்தன்மையை அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் உண்டு. வெற்றி லையோடு சேர்ந்த சுண்ணாம்பு உடம்புக்கு தேவையான கால்சியச் சத்தையும் தருகிறது. சுபநிகழ்ச்சிகளில், விருந்துக்குப் பிறகு ஜீரணத் துக்காக வெற்றிலை பாக்கு கொடுத்து வழி யனுப்பும் வழக்கம் ஏற்பட்டது. திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு அழைக்கும்போது அழைப்பிதழோடு வெற்றிலை, பணம் வைத்து அழைப்பார்கள்.

வெற்றிலையின் நுனியில் லட்சுமியும், நடுவில் சரஸ்வதியும், காம்பில் பார்வதி தேவியும் இருப்பதாக தகவல் உண்டு. இறைவனுக்கு எத்தனை பதார்த்தங்களை நிவேதனம் செய் தாலும், வெற்றிலை பாக்கு வைக்காவிட்டால் அந்நிவேதனம் முற்றுப் பெறுவதில்லை என்பர். பூஜை மற்றும் திருமணம் ஆகியவற்றின் போதும் அவை சுபமாக நடந்தேற வேண்டும் என்பதற்காக வெற்றிலை பாக்கு படைக்கப்படுகிறது. வெற்றிலையும், பாக்கும் மகாலட்சுமியின் அம்சங் களாகும்.

விருந்தினர்களுக்கும், சுபநிகழ்ச்சியின்போது நமது வீட்டிற்கு வருபவர்களுக்கும் சாக் லேட் முதலிய நவநாகரீக பொருட்களை கொடுக்கும் பழக்கம் பெருகி வருகிறது. என்ன கொடுத்தாலும் வெற்றிலையும், பாக் கும் தவறாமல் கொடுத்தால்தான் குடும்பம் செழித்தோங்கும் என்பது நம்பிக்கை. வெற்றி லையை வாடவிடுவது வீட்டுக்கு சுபமல்ல என்பது நம்பிக்கை. வெற்றிலை பாக்கை எப்போதும் வலதுகையால்தான் வாங்கவேண்டும். மகிமை மிக்கதும், மங்களகரமானதுமான வெற்றிலை, வெற்றியின் அடையாளமாகவே கருதப்படுகிறது.

இன்றைய வாழ்க்கை சூழலில் செல்வத் தினை சேர்க்க போராடும் மனிதர்களே நாம் அனைவரும், செல்வத்தினை தேடி ஓடாத மனிதர்களே இந்த உலகத்தில் இல்லை, திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு என்பது முதுமொழி.

நாமும் செல்வத்தினை சேர்க்க அரும்பாடு படுகி றோம், செல்வத்தினை சம்பாதிப்பதும், அதனை நம்மிடம் நிலைக்க வைப்பதும் வாழ்வில் ஒரு மிகப்பெரிய சவாலாகவே விளங்குகிறது. அந்த நிலையினை மாற்றவே சில எளிய செல்வவளம் பெருகி நிலைக்க தாந்திரீக முறைகள் உள்ளன.

**1**.இலவங்கப்பட்டையை பொடி செய்து சிறிது எடுத்து ஒரு பச்சை நிற துணியில் மடித்து பச்சை நூலால் கட்டி மணிபர்சிலோ அல்லது சட்டைப்பையிலோ எப்பொழுதும் வைத்துக்கொள்ளவும்.

**2**. செல்வவளம் பெருகி நிலைக்க பசுமையான வெற்றிலை ஒன்றை எந்த நல்ல காரியங்கள், பணசம்பந்தமான காரியங்கள் போன்றவற்றிக்கு செல்லும் போதும் உடன் வைத்துக்கொள்ளவும். (பணவருவாய் பலவகையிலும் பெருகும் ).



**3**. நிலக்கரி தனாகர்ஷண ஷக்தி உடையது அதனை ஒரு சிறு துண்டு எப்போதும் உடன் வைத்துக்கொள்ளவும்.

**4**. செல்வவளம் பெருகி நிலைக்க ரூபாய்த்தாளை எப்பொழுதும் சுருளாக கட்டியே பணப்பெட்டியில் வைத்துக்கொள்ள வேண்டும். (சுழற்சி சக்தி உண்டாகி செல்வமானது பெருகி தங்கும்).

**5**. தினமும் ஏதேனும் ஒரு நாணயத்தை இரண்டு கைகளிலும் பிடித்தபடி உங்கள் தேவை யினை மனமார வேண்டி அந்த காசுகளை சேமித்து வந்து மாதக்கடைசியில் சேமித்த பணத்தில் வாழைப்பழம் வாங்கி பாசுமாட்டிற்கு தானமாக வழங்கவும்.

**6**. செல்வவளம் பெருகி நிலைக்க எந்த விசயத்திற்காக பணத்தினை செலவிட்டாலும், செலவிடும் பணத்தினை கையில் வைத்து நெஞ் சிற்கு நேராக பிடித்து பிறர் அறியாதவாறு "ஓம் ஸ்ரீம் நமஹ இலட்சமாக திரும்பிவா வசி வசி" என்று ஐந்து முறை கூறி செலவிடவும்.

**7**. முக்கியமான காரியங்கள், பணசம்பந்தமான விஷயங்களுக்கு செல்லும்போது எலுமிச்சம் பழம் ஒன்றை "ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் சக்தியே அருள்வாய் போற்றி ஓம்" என ஆறு முறை உச்சரித்து உடன் வைத்துக்கொள்ளவும்.

**8**. செல்வவளம் பெருகி நிலைக்க மாதச்சம்பளமாகட்டும், சுயத்தொழில், வியாபாரம் செய்பவர்கள் யாராகினும் வருவாயில் முதல் செலவாக உப்பு, மல்லிகைபூ இரண்டையும் வாங்குவதே முதல் செலவாக இருக்க வேண்டும்.

**9**.பணப்பெட்டி தென்மேற்கு மூலையில் இருக்கவேண்டும், அதில் எப்போதும் மல்லிகைபூ போட்டு வைக்கவேண்டும்.

**10**. செல்வவளம் பெருகி நிலைக்க பணப்பெட்டியில் பெரிய தொகைகளை வைக்கும்போது ஆறு வெற்றிலைகள், முன்று

பாக்குகள் சேர்த்து வைக்கவும்.

**11.** மகாலக்ஷ்மி படத்திற்கு தினமும் காலை, மாலை நெய், தேங்காய் எண்ணை, நல்லெண்ணெய் ஏதாவதொன்றில் இரண்டு திரி போட்டு விளக்கு ஏற்றி வீடு, கடை முழுவதும் சாம்பிராணி புகை காட்டிவருவது பண விஷயத்தில் மிகசிறந்த வசியமாகும்.

**12.** வடகிழக்கு மூலையில் குடிக்கும் நீரைவைத்து அதில் எலுமிச்சை ஒன்றை போட்டு வைக்கவும், தொடர்ந்து இரண்டு மாதங்கள் செய்து வந்தால் பற்றாக்குறை நீங்கி செல்வம் கொழிக்கும்.

**13.** செல்வவளம் பெருகி நிலைக்க கல் உப்பை வீட்டில் வியாபார ஸ்தலங்களில் எல்லா மூலைகளிலும் சிறிது போட்டு வைத்தால் தீய சக்திகள் ஓடும், பணம் பெருகும்.

**14.** பணப்பெட்டி சந்தனப்பெட்டியாக இருந்தால் அதிர்ஷ்டம் பெருகும். வசதி இல்லையேல் பச்சை நிற பட்டுத்துணியில் பணப்பை செய்து அதனுள் சிறிய சந்தனக்கட்டை ஒன்றை அதனுள் போட்டு வைக்கவும், சந்தனம் இருப்பதை வளர்க்கும் சக்தி உடையது.

**15.** செல்வவளம் பெருகி நிலைக்க வருமானத்தில் ஐந்து சதவீதத்தை தானதிற்கென போட்டு வையுங்கள், மாதம் ஒருநாள் அதை தானமாக கொடுங்கள், கொடுப்பது பெருகும்.

**16.** முக்கியகாரியமாக தொழில் விஷயமாக வெளியே செல்லும்போது அருகம்புல் நுனி ஒன்றையோ, திருநீற்றுப்பச்சிலை ஒன்றையோ பறித்து பையில் வைத்துச்செல்ல சென்ற காரியம் நிச்சயம் வெற்றியே.

**17.** செல்வவளம் பெருகி நிலைக்க சாம்பிராணியும், மருதாணி விதையும், வெண்கடுகும் கலந்து வீட்டில், வியாபார ஸ்தலத்தில் தூபமிட தீய சக்திகள், கண்திருஷ்டி, தோஷங்கள் நீங்கி தொழில் முன்னேற்றம் அடையும், மகாலக்ஷ்மி நம்மிடத்தில் நடமாடுவாள்.




- கந்தனுக்குரிய விரதங்கள்: 1. வார விரதம், 2. நட்சத்திர விரதம், 3. திதி விரதம்.
- முருகனின் மூலமந்திரம் ஓம் சரவணபவாய நம என்பதாகும்.
- வேலும் மயிலும் இல்லாத வேலவன் ஆண்டார் குப்பத்தில் உள்ளார்.
- முருகப் பெருமான் தோன்றிய இடம் சரவணப் பொய்கை.
- வேடுபறி என்பது முருகப் பெருமான் வள்ளியைச் சிறை எடுத்ததைக் கொண்டாடும் விழாவாகும்.
- பொன்னேரிக்கு அருகில் உள்ள பெரும்பேடு முருகன் கோவிலில் முருகன் 6 அடி உயரத்தில் உள்ளார். இங்கு தெய்வானை கிரீடத்துடனும் வள்ளிக் குறத்தி கொடையுடனும் காட்சி தருகிறார்கள். இப்படி வேறு எங்குமில்லை.
- முருகப் பெருமானின் திருவடி பட்ட இடம் ஞானமலை ஆகும்.
- முருகன் சிறிது காலம் நான்முகனுக்குப் பதில் படைப்புத் தொழிலையும் செய்திருக்கிறார். இதனை உணர்த்தும் வகையில் திண்டுக்கல்லில் இருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள சின்னாளப்பட்டியில் நான்கு தலையுள்ள முருகன் ஆலயம் அமைந்துள்ளது.





# கோவில்களை சுத்தப்படுத்தும் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் உழவாரப்பணிக்குழுவினர்

திருமுல்லை வாயிலைச் சேர்ந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் உழவாரப்பணிக்குழு வெற்றிகரமாக 109வது உழவாரப்பணியை மிகச் சிறப்பாக செய்துள்ளனர்.

இவர்கள் சென்னை மட்டுமில்லாமல், வெளி மாவட்டத்திருக்கோயில்களிலும் சென்று உழவாரப் பணியை மிகச் சிறப்பாகவும் சிரத்தையுடனும் செயல்படுத்தி வருகின்றனர்.

இக்குழுவினரின் 109வது உழவாரப் பணியினை திருவேற்காடு அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன்திருக்கோயிலில் 21.04.2019 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு அன்பர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இக்குழுவினரின் உழவாரப்பணி விபரங்களை மேலும் தெரிந்து கொள்ள, சிவ ஜி.சத்யபாபு, செல் 9283147071 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.












# கடவுள் பார்வை நம்மீது பட்டால் வேதத்தை கேட்க ஆவல் வரும்

வேத அர்த்தம் சொல்பவனுக்கு தெரியாவிட்டாலும் உரிய தேவதைகளுக்குத் தெரியும்!

வேத சப்தத்தை உச்சாரணம் பண்ணுவது எப்படி தபஸோ அப்படியே கேட்பதும்.

வேதம் சொன்னால் புரியாது; புரியாத வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் வருவதே பெரிய ஏற்றம். வேத சப்தம் நம்மை கேட்கப் பண்ணுகிறது.

அதர்வண வேதம் சொல்கிறது

இங்கிருந்து ஒருவர் கோவிலுக்குப் போய் பகவானைச் சேவிக்கிறார்.

பகவான் இவரைப் பார்த்தாரா என்று எப்படி தெரிந்து கொள்வது?

பகவான் இவரை அனுக்ரஹித்தானா என்பதற்கு வேதம் ஒரு அளவுகோல் சொல்கிறது.

ஓரிடத்தில் வேத பாராயணம் நடக்கிறது. வேத சப்தத்தைக்கேட்டு அங்கே போய் அவர் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு கேட்கிறார்.

வேதம் சொல்கிறது

எப்போது வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு வேத பாராயணத்தைக் கேட்கிறாரோ அப்போது பகவான் அவரைப் பார்த்து விட்டான் என அர்த்தம்.

பகவான் பார்த்தான் என்பதற்கு அளவுகோல் எது?

வேதத்தைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுதல். வேதத்தைக் கேட்க ஒருத்தருக்குப் பிடிக்கவில்லை என்றால் இன்னும் பகவானின் கடாக்ஷம் அவனுக்கு கிடைக்கவில்லை என்று அர்த்தம்.

பகவானிடத்தில் த்வேஷம் இருந்தால் கூட அவன் பொறுத்துக் கொள்வான்.

வேதத்தின் மீது த்வேஷம் இருந்தால் ஒத்துக் கொள்ள மாட்டான்.

நாம் வேதத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

ந்ருஸிம்ஹ அவதாரத்தின் முன்பு பகவான் சொன்னான் 'யதா வேதேஷஔ' என்று எவன் வேதத்தை நிந்திக்கிறானோ அவன் சீக்கிரம் நாசத்தை அடைவான் என்றான்.

அர்த்தம் தெரியா விட்டாலும் வேதத்தைக் கேட்க வேண்டும். கேட்க வேண்டும் என்ற அபிப்பிராயம் நமக்கு வேண்டும்.

அர்த்தமே தெரியா விட்டாலும் பரவாயில்லை. இது எப்படி சரியாகும் என்று கேள்வி.

வேத மந்திரங்களுக்கு அர்த்தம் தெரியாமல்ஒருவர் ஹோமம் பண்ணுகிறார்.

அப்போது பலன் சித்திக்குமா என்றால் சித்திக்கும் என்கிறது வேதம். ப்ரம்மச்சாரி உபநயனத்தின் போது பிக்ஷாடணம் பிச்சை எடுக்கக் கற்றுக் கொள்கிறான்.

அதற்கு அவனுக்குச் சொல்லிக் கொடுக்கப் படுகிறது. ஒவ்வொரு வீட்டின் முன்பும் 'பவதி பிஷாந்தேஹி' என்கிறான்.

இவனுக்கு சமஸ்கிருத பாடம் ஆரம்பிக்கவில்லை. ராம சப்தம் கூட தெரியாது. 'தாங்கள் பிச்சை இடுங்கள்' என்ற அர்த்தமும் தெரியாது.

ஆனால் அதை சொல்லக் கற்றுக் கொண்டுள்ளான். அவனுக்கு என்ன தெரியும்..?

'பவதீ பிஷாந்தேஹி'என்று கூக்குரலிட்டால் பாத்திரம் நிறையும். வீட்டுக் கதவைத் திறந்து வந்து அந்த வீட்டுப் பெண்மணி பாத்திரத்தில் அரிசியை இடுகிறாள். பாத்திரம் நிறைகிறது.

ப்ரம்மச்சாரி அர்த்தம் தெரியாமல் சொல்கிறான். ஆனாலும் பாத்திரம் எப்படி நிறைகிறது என்றால், இவனுக்குத் தெரியாமல் போனாலும் வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியும்.

அது போல், வேத மந்திரத்திற்கு நமக்கு அர்த்தம் தெரியாவிட்டாலும் தேவதைகளுக்குத் தெரியுமாதலினால் அவர்கள் ஓடி வந்து நாம் கொடுப்பதை ஸ்வீகரித்து நம்முடைய அபீஷ்டத்தை பூர்த்தி பண்ணுவார்கள்..

– முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யார் ஸ்வாமி.





Hinduwebsite.com



# முருகன் சிறப்புகள்

- சிறுவாபுரி சென்னைநெல்லூர் வழியில் பொன்னேரிக்கு 20 கி.மீ. தூரமுள்ளது புதுமனை புகுவோர் முன்னர் இவ்வூரில் முருகனுக்குப் பால் அபிஷேகம் செய்தால் வீட்டில் சகல சவுபாக்கியங்களும் முருகனால் உண்டாகும்.
- சிவகாசி அருகே 51 படிக்கட்டுகள் கொண்ட மலைமீது முருகன் கோவில் உள்ளது. 108 வைஷ்ணவத் திருப்பதிகளில் ஒன்று இது. இங்கு சிவன் கோவிலும் உண்டு. இந்த தலத்தின் பெயர் திருத்தங்கல் ஆகும்.
- தமிழ்நாட்டில் முதல் தங்கத்தேர் பழனி முருகன் கோவிலில் 1957ல் இழுக்கப்பட்டது.
- முருகனுக்கு உருவமில்லாத கோவில் விருத்தா சலத்தில் உள்ளது. பெயர் கொளஞ்சியப்பர். அருவுருவ நிலைப் பிரார்த்தனை தலம் என்று இதனைக் கூறுவார்கள்.
- கந்த சஷ்டி கவசத்தை எழுதியவர் தேவராயன் ஆவார்.
- முருக வழிபாடு என்பது ஷண்மம் என்று சொல்லப்படுகின்றது.
- கோபுரத்து இளையனார் என்கிற முருகன் சந்நிதி திருவண்ணாமலையில் உள்ளது.
- முருகன் வீற்றிருக்கும் மிக நீண்ட மலை திருத்தணி பள்ளிப்பட்டு ரோட்டில் அமைந்துள்ள நெடியமலை ஆகும்.





# அலைபாயும் மனதை அடக்கும் தியானத்தின் மகிமை

ரமண மகரிஷியிடம் பக்தர் ஒருவர் தனது சந்தேகத்தைக் கேட்க வந்தார்.

அப்பொழுது ரமணர் அணில் குட்டிகள் சிலவற்றிற்கு பஞ்சால் நனைத்து பால் புகட்டிக்கொண்டிருந்தார்...

அவற்றின் வயிறு நிறைந்தவுடன் ஒரு கூடையில் பஞ்சை நிரப்பி மெத்தென்று அதன் மேல் படுக்க வைத்தார்...

சற்றுநேரம் படுத்த குட்டிகளில் ஒன்று குதித்து அங்கும் இங்கும் ஓடியது...

அதை மறுபடியும் பிடித்துப் போட்டார்...

உடனே மற்றொன்று ஓட அதையும் பிடித்துப் போட்டார்...

இப்படி ஒவ்வொன்றாக ஓட ஒருவாறாக எல்லாவற்றையும் பிடித்துப் போட்டு கூடையை மூடினார்...

எல்லாம் அமைதியாக தூங்கின...

வந்த பக்தர் இதையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்தபடி ஸ்வாமி என் மனதை எப்படியாவது அடக்க ஆசைப்படுகிறேன்...

அங்கும் இங்கும் அலை பாய்கிறது...

என் மனம் தானே தவறு என்று தெரிந்தாலும் அடக்க முடியவில்லையே...

தயவு செய்து அடக்க வழி சொல்லுங்கள் என்று கேட்டார்...

இந்தக் குட்டிகளின் அம்மாவை ஓர் பூனை சாப்பிட்டு விட்டது. இவைகளும் அதைப் பார்த்தன...

தாயில்லாத அணில் குட்டிகள் பசியால் துடிக்காமல் இருக்க பாலும்,

தூங்குவதற்கு வசதியாக அம்மா மடி போல் பஞ்சு போட்டு நான் படுக்க வைத்தாலும்,

அவை அதை மீறி வெளியே ஓடுகின்றன...

வெளியில் பூனை என்ற ஆபத்து இருந்தாலும் அவை வெளியே ஓடுவது போலத்தான் நம் மனதும்,

அது திரும்ப திரும்ப அலை பாயும்...

நாம்தான் தியானம் என்ற கட்டுப்பாட்டை திரும்ப திரும்ப சொல்லி,

நம் மனதை கூடையில் அடைக்க வேண்டும்...

பழக பழக அணில்கள் பஞ்சுக் கூடையை தன்னுடைய இருப்பிடமாக அமைத்து சந்தோஷமாக வாழும் பிறகு கூடையை மூடக்கூட தேவை இருக்காது...

அதே போல் உன்னுடைய மனமும் ஆழ்ந்த தியானத்தை பழக்கிக் கொண்டால்,

பின்னர் அது உன் கட்டுப்பாட்டில் இருக்கும்...

எங்கும் அலை பாயாது.!"

– ரமண மகரிஷி



GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

# நினைவுத்திறனை வலுப்படுத்தும் தியானம்

57 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: “ஒருவருடைய நினைவுத்திறனை வளர்ப்பதற்கு அவர் எதையும் ஆழ்ந்த கவனத்துடன் செய்யவேண்டும். அநேக மக்கள் தங்கள் செயல்பாடுகளை தொடர்ந்து கவனக்குறைவுடன் செய்கிறார்கள். அவர்களது செயல்களுக்கும் சிந்தனைகளுக்கும் இடையில் பெரிய பிளவு உள்ளது. அதனால்தான் அவர்கள் எதையும் மிக நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ள முடிவதில்லை. ஒருவர் எதை மீண்டும் நினைவில் கொள்ள விரும்புகிறாரோ அதை அவர் சிறந்த கவனத்துடன் செய்ய வேண்டும்.

ஒருவர் பரபரப்புடன் இல்லாதிருக்கவேண்டும். ஆனால் அவர் எந்த காரியத்தை மேற்கொண்டாலும் அது அவரது முழுமனதுடன் செய்யப் படவேண்டும். தேவாலயங்களில் ஒருவர் உபதேச உரையை கூர்ந்து, கவனத்துடன் கேட்கவேண்டும். வீட்டு வேலைகளில் கவனத்துடனும் ஆர்வத்துடனும் ஈடுபடுங்கள். கையிலிருக்கும் வேலையின்மீது விழிப்புள்ள மனதை வைத்திருப்பதானது, தன் மனதின் பின்னணியில் இடைவிடாது இறைவனை நினைத்திருப்பதற்கு ஒருவரை தடைசெய்யாது. ஆனால் ஒருவர் தியானம் செய்யும்பொழுது, அவர் இறைவனைப்பற்றி மட்டும் தான் சிந்திக்கவேண்டும். ஞாபகசக்தி தியானத்தினால் வலிமை யூட்டப் படுகிறது.”

“தியானம் என்றால் என்ன? ஆன்மாவுடன் ஒன்றாயிருத்தல், சரீரத்துட னும் மனித வரையறைகளுடனும் தொடர்புள்ள உணர்வு நிலையை அகற்றி, தான், ஆன்மாதான் என்பதை நினைவில் வைக்க முயற்சித்துக் கொண்டிருப்பது என்பதுதான் அதன் பொருள். மனிதன் விழிப்புள்ள மன முயற்சியுடன் தன்னை, தான் ஒரு பிறவியில் மட்டும் குடியிருக்கும் தேகத்துடன் அல்லாமல் அழிவற்ற ஆன்மாவுடன் சம்பந்தப்படுத்தத் தொடங்கிறபொழுது, அவன் கடந்த வாழ்க்கையின் அனுபவங்களை அதிகமாக நினைவுகூரத்தொடங்கி, தான் இறைவனின் நெஞ் சத்திலிருந்து கீழிறங்கி வந்துள்ளோம்என்பதை இறுதியாக நினைவு கூர்வான். இறைவனிடத்தில் ஒருவரின் வாழ்க்கை மட்டுமல்லாமல் எல்லா உயிர்களுடைய அனைத்து அனுபவங் களின் நினைவும் பொதிந்துள்ளது. மனிதன் தன்னுள் இருக்கும் ஆன்மாவுடன் தொடர்பு கொள்ளும் பொழுதுமறந்து போன காலங்களும் மரணமற்ற ஆன்மாவின் சக்தி களும் அவனது உணர்வு நிலைக்குள் மீண்டும் வரு கின்றன. தியானம் என்பது ஒருவர் அழியும் சரீரம் அல்ல; ஆனால் இறைவனுடன் ஒன்றாகியிருக்கும் அழிவற்ற ஆன்மா எனபதை நினைவு கூர்வது என்று பொருளாகும்.”



“பகல் நேரத்தில் நாம் நம்மை மனிதர்கள்என்று நினைக்கும் சுபாவம் உடையவர்களாய் இருக்கிறோம். ஆனால் இரவு நேரத்தில் கனவில்லாத ஆழ்ந்த உறக்கத்தில் நமது அழியும் தேக மனோபாவத்தை மறந்து விடுகிறோம். தியானத்தில் சுய நினைவுடன் நாம் நமது மனித அடையாளத்தை மறக்க முயற்சிக் கலாம்; நாம் தேக உணர்வு நிலையைக் கைவிட்டு, நாம் பரம்பொருள் என்பதை நினைவும் கூரலாம். இந்தப் பயிற்சியில் விடாமுயற்சியுடன் இருப்பவர்கள் ஆசான்கள் ஆகிவிடுவர்.”

உங்கள் வாழ்க்கையில் இறைவனுக்காக நேரம் ஒதுக்குதல்.

குருதேவர் அருளுகிறார்: “ஒவ்வொன்றும் அதன் இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் உங்கள் உண்மையான ஆனந்தத்தை விலையாகத்தந்து நேரத்தை நீங்கள் விரயம் செய்வது உகந்ததல்ல. தியானம் செய்து இறைவனை அறிய முயலுவதற்காகவும், அவனது தெய்வீக உணர்வில் இரவும் பகலும் என்னால் இருக்க முடிவதற்காகவும் நான் ஒவ்வொரு தேவையற்ற செயலையும் கைவிட்டேன். நாம் வாழ்க்கையை சரியாகவும். விவேகத்துடனும் மற்றும் வீணாக்காமலும் பயன்படுத்தினால் நம்மால் அதை எவ்வளவு மேன்மையாக்க முடியும் என்பதை நம்மில் வெகு சிலரே அறிவார்கள். நமது நேரத்தை நாம் சிக்கனமாகச் செலவு செய்வோம். நாம் விழித்தெழுவதற்குமுன் வாழ்நாட்கள் அழிந்துவிடும். அதனால்தான் இறைவன் நமக்கு அளித்துள்ள அழிவற்ற நேரத்தின் மதிப்பை நாம் உணர்வதில்லை.

சோம்பலில் உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். மிக அநேகர் பயனற்ற செயல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கின்றனர். அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களிடம் கேளுங்கள். அவர்கள் “ஓ, நான் ஒவ்வொரு நிமிடமும் மும்முரமாயிருக்கின்றேன்!” என்று வழக்கமாகக் கூறுவர். ஆனால் அவர்கள் எதைப்பற்றி மும்முரமாயிருந்தார்கள் என்பதை அவர்கள் நினைவுகூர்வது அபூர்வம்!

ஒரு நொடிப்பொழுதில் நீங்கள் இந்த உலகைவிட்டு நீங்க வேண்டியிருக்கும்; உங்களுடைய எல்லா நிகழ்ச்சிகளையும் இரத்து செய்யவேண்டியிருக்கும். பிறகு ஏன் வேறு எந்த வேலைக்கும் முதன்மையான முக்கியத்துவத்தை அளித்து அதன் பயனாக உங்களுக்கு இறைவனுக்கென நேரம் இல்லாதவாறு செய்ய வேண்டும்? இது விவேகமல்ல. நம் மீது வீசப்பட்டுள்ள மாயவலை என்னும் மாயையின் காரணமாக நாம் நம்மையே ஆசைகளில் சிக்கவைத்துக்கொண்டு இறைவனை மறந்துவிடுகின்றோம்.


ஆன்மிகமலர் மெயில் புக் 1-15 மே 2019 21
www.aanmeegamalar.com

“எது மிகச்சிறந்த பிரார்த்தனை?” என்று ஒரு சீடர் வினவினார். பரமஹம்ஸ யோகானந்தர் பதிலளித்தார். “இறைவனிடம் கூறுங்கள், “தயவு கூர்ந்து உன் சித்தத்தை எனக்கு தெரிவி; எனக்கு இது வேண்டும், எனக்கு அது வேண்டும்” என்று கூறாதீர்கள். ஆனால் தேவை என்ன என்பதை அவன் அறிவான் என்பதில் நம்பிக்கை வையுங்கள். உங்களுக்காக இறைவன் தேர்ந்தெடுக்கும்பொழுது மிகவும் சிறந்தவற்றை நீங்கள் பெறுவதைத் காண்பீர்கள்.”

### மேன்மையின் விலை தனிமை

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹமஸர் அருளுகிறார்: “மேன்மையின் விலை தனிமை. அகத்தே தனித்திருங்கள். அநேகர் பின்பற்றும் குறிக்கோளில்லாத வாழ்க்கையை நீங்கள் வாழவேண்டாம். தியானம் செய்வதுடன் நல்ல நூல்களை அதிகமாகப் படியுங்கள். எழுச்சியூட்டவல்ல எவ்வளவோ விஷயங்கள் தெரிந்து கொள்வதற்கென இருந்தபோதிலும், மனிதன் தன் நேரத்தை முட்டாள்தனமாக செலவு செய்கிறான். மகான்களுடைய அறிவுரைக்கிணங்க நீங்கள் மனதை ஒருமுகப்படுத்திச் செயல்படாவிட்டால், சந்தோஷம் ஒருபோதும் கிட்டாது. உங்களுக்கு உதவி புரிவதற்காகவே அவர்களது எண்ணங்கள் சாத்திரங்களிலும் ஏனைய உண்மையான நூல்களிலும் உள்ளன.

ஆகவே, எப்பொழுதும் புதிய கிளர்ச்சியூட்டும் விஷயங்களை நாடி, நேரத்தை வீணாக்காதீர்கள். எப்பொழுதாவது ஒருமுறை திரைப்படங்களுக்குப்போவதும், ஒரு சிறிது சமூக வாழ்க்கையில் ஈடுபடுவதும் சரியே; ஆனால் பெரும்பாலும் விலகியிருந்து அகமுகமாக வாழுங்கள். மகிழ்ச்சியானது, தியானத்தையும், பெரியமனங்களை அவர்கள் படைத்துள்ள நூல்கள் மூலம் அறிவதையும், உயர் குணமும் அன்பும் உடையவர்களை உங்களைச் சுற்றிவைத்துக் கொள்வதையும் சார்ந்துள்ளது. ஏகாந்தத்தை அனுபவியுங்கள்; ஆனால் மற்றவர்களுடன் கலந்து பழக நீங்கள் விரும்பினால், அவர் உங்களை மறக்க முடியாமல், தம்மை ஏழுச்சியூட்டி இறைவன்பால் தம் மனங்களை திரும்பவைத்த ஒருவரை சந்தித்தோம் என்று எப்பொழுதும் நினைவில் வைக்குமளவிற்கு அவர்களோடு உங்கள் அனைத்து பாசத்தையும் நேசத்தையும் செலுத்தி பழகுங்கள்.”

தியானத்தைப்பற்றியும் தனிமையைப் பற்றியும் குருதேவர் கூறியுள்ளார். இறைவனுக்காக நம் வாழ்க்கையில் நேரத்தை ஒதுக்குவது பற்றியும் அதுமட்டுமின்றி சமத்துவத்தைப் பற்றியும் கூறியுள்ளார். இறைவனை அடைவதற்கு சமத்துவமும் வேண்டும். பகவத் கீதையில் சமத்துவத்தைப் பற்றி கூறியுள்ளது என்ன வென்றால்:

ஆத்மௌபம்யேன ஸர்வத்ர
ஸமம் பச்யதியோர்ஜுன
ஸுகம் வா யதி வா து:கம்
ஸ யோகீ பரமோ மத: (கீதை 6\32)

ஏ அர்ஜுனா! எந்த மனிதன் தன்னுடைய உடல் போலவே எங்கும் சமமாகப் பார்க்கிறானோ, மேலும் சுகம் அல்லது துக்கத்தை எங்கும் சமமாகப் பார்க்கிறானோ. அந்த யோகி மிகவும் தலைசிறந்தவனாக எண்ணப்படுகிறான்.

உடலில் எந்த அங்கத்தில் வலி ஏற்பட்டாலும் அதைத்தீர்க்கவேண்டும் என்ற ஈடுபாடு, வேகம் ஏற்படுகிறது. அப்படியே வேறு எந்த உயிருக்கும் துக்கமோ கஷ்டமோ ஏற்பட்டால் அதை நிவர்த்திப்பதற்குத் தீவிரமான விருப்பம் ஏற்படவேண்டும். அப்பொழுது வருவதே சமத்துவமாகும்.

"பர துக துக சுக சுக தே கேபர” என்று துளசீதாசர் கூறுகிறார். (மாலைசம் 7\38 1)

“தன்னுடைய சுகத்தையே பெரிதாக எண்ணி தீவிர ஆசை கொண்டிருக்கும்வரையில் எவ்வளவு முயன்றாலும் சமத்துவம் வராது. ஆனால் மற்றவர்களுக்கு எவ்வாறு சுகம் கொடுக்கலாம்? நலம் தரலாம்? நாம் என்ன செய்தால் அவர்களுக்குப் பயன் கிடைக்கும்? மங்களம் ஏற்படும்? என்று தீவிரமாகச் சிந்தித்து ஈடுபடத் தொடங்கினால் சமத்துவம் தானே வந்துவிடும். முதலில் இதை தன் வீட்டிலேயே தொடங்கவேண்டும். யாருக்கும் சற்றேனும் துக்கமோ, தொல்லையோ, கெடுதலோ ஏற்படக்கூடாது என்ற எண்ணம் இதயத்தில் உருவாக வேண்டும். எனக்கு எவ்வளவு கஷ்டம் நேர்ந்தாலும் சரி; என்னுடைய தந்தை, தாய், மனைவி, குழந்தைகள், சகோதரர்கள் அவர்களின் மனைவிகள் ஆகியோர்க்கு நன்மை ஏற்பட வேண்டும்.

வீட்டிலுள்ளவர்களுக்கு சௌகரியம் செய்வதால் நம்முடைய இதயத்தில் அமைதி ஏற்படும். இந்த நிலையில் நம்முடைய வீட்டிற்கு வெளியிலும் சுகம் தருவோமானால் உள்ளத்தில் ஆனந்தத்தின் இனிய அலைகள் அடித்துவரத் தொடங்கிவிடும். ஆனால் மமதையுடன் சுகம் தரும் வேலைகளைச் செய்தால் நம்முடைய முன்னேற்றம் ஏற்படாது. “ நம்முடைய என்கின்ற பற்று (மமதை) இல்லாமல் நன்மை செய்தோமானால் நல்ல பயன் ஏற்படும்.” நம்முடையது என்று தொடங்கினாலும் பிறகு அந்த மமதையை அகற்றி விட்டோமானால் அப்பொழுது ஏற்படும் பயனும் முன் சொன்னதற்குச் சமமாக இருக்கும்.”

இறைவன் எங்கும் நிறைத்திருக்கிறான். அவ்வாறிருக்கையில் இறைவனால் படைக்கப்பட்டுள்ளது. தானே எல்லா மனிதர்களும் உயிரினங்களும் மற்றவை அனைத்தும். அவனால் படைக்கப்பட்டுள்ள அனைத்துள்ளும் அவன்தானே உறைந்திருக்கிறான். இந்த இரகசியத்தை அனைவரும் அறியத்தான் வேண்டும். அதை உணர்ந்தறிந்தால் மட்டும்தான் மேலே கூறியுள்ள சமத்துவம் ஏற்படும். சமத்துவம் வந்தால் அனைத்தையும் சமமாகப் பார்க்க முடியும். நமக்கு ஒரு வேதனை வந்தால் அதனை நாம் எவ்வாறு வேதனையாக உணர முடியுமோ அதே வேதனைதான் பிறருக்கு வந்தாலும் இருக்கக்கூடும் என்பதை நாம் உணர வேண்டும். அது பொதுநலமும் சமத்துவமும் இருந்தாலொழிய பிறருடைய துன்பங்களை உணர முடியாது. அதற்கு இறைவனை உணர வேண்டும். இறைவனை உணர்ந்தால் அப்பொழுது இவை சாத்தியமாகும்.

இறைவனை உணரவேண்டுமென்றால் தியானத்தால் மட்டும்தான் முடியும். குறிப்பிட்டுக் கூறினால் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தருடைய ‘ யோகதா தியானத்தால்’ மட்டும்தான் உணர முடியும். நானும் யோகதா பாதையில் வரும்முன்னர் தியானத்திற்காக மூன்று இடங்களுக்குச் சென்று வந்தேன். அவையெல்லாம் எனக்கு எந்த விதத்திலும் திருப்தி அளிக்கவில்லை. இந்தப்பாதையில் வந்து தியானத்தில் ஈடுபட்டபின்னர்தான் ’யோகதா சத் சங்கப் பாதையையும் யோகதா தியானத்தையும்’ அவற்றின் மகிமையையும் நான் உணர்ந்தேன்.

குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தர்தான் உண்மையான குரு என்றும் சரியான குரு (ரைட் குரு) என்பதையும் யோகதா பாதை ஓர் உண்மையான பாதை என்பதையும் உணர்ந்தேன் என்று கூறுவதைவிட இறைவன் என்னை உணரவைத்தான் என்றுதான் கூறவேண்டும். குருதேவர், தன்னுடைய சொற்பொழிவுகளில் ’காட் ரைட் குரு’ (குருவாக வந்திருப்பது இறைவன்தான்) என்று கூறியுள்ளார். அதுதான் உண்மை என்பது எனக்கு புலப்பட்டுவிட்டது.

அதனால் குருதேவர் கூறுவது போன்று, யோகதா தியானத்தைச் சரியாகச் செய்து குருதேவருடைய போதனைகளை பின்பற்றி குருதேவர் காட்டும் பாதையில் பயணம் செய்தால் நிச்சயம் இறைவனை உணரலாம்; அதன்பின் இறை அனுபூதியும் பெறலாம் என்பது உண்மையே. இதற்குமேல் கூற வார்த்தைகள் இல்லை. இதை எழுதுவதால் இறைவன் மற்றும் குருதேவரைப்பற்றி எனக்கும், இதைப்படிப்பதால் படிப்பவர்களுக்கும் நிச்சயம் நன்மைதான் என்பதில் துளியும் ஐயமில்லை.

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909



ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# பக்தியில் நமது நிலை

நியாயத்தை நியாயமாகத் தான் பார்க்க வேண்டும். வேலையை கவனித்து விட்டுத்தான், வீட்டிற்குச் சென்று உண்ண வேண்டும். இருப்பதை சாப்பிட்டு, வீட்டிற்குச் சென்று சாவகாசமாக உண்ண வேண்டும்.

பகவத் அனுபவம்பரமாத்மா லட்சியம்பெருவாரியான மக்களுக்கு வராமல் இருக்கக் காரணம் என்ன? பொதுமக்களிடம் மதத்தைப் பற்றிய அறிவு, செல்வாக்கு பெற்று இருக்கிறது.

'ஸ்வ அனுபவம் தேவை'அச்சு பதித்த மாதிரி சரியான வார்த்தைகளை மகான்கள் சொல்வர். இல்லை என்றால் நமக்கு ஆர்வம் இருக்காது.காமம் இல்லாத ஆண்/பெண் திருமணம் செய்து கொள்ள முடியாது. பகவத் அனுபவம் சுயமாக வேண்டும் என்கிற எண்ணம் வேண்டும்.இதற்கு மகான்களை சந்திக்க வேண்டும்.

சுவாமி சின்மயானந்தா தொண்டு செய்திருக்கிறார்.. சொற்பொழிவு.இது மனதில் ஒரு சின்ன உணர்வை கொடுத்து இருக்கிறது.எந்த ஒரு சார்பும் இல்லாமல் செய்திருக்கிறார். பிராந்திய அளவில் பிரசாரம் செய்பவர்களை தேடித்தான் பார்க்க வேண்டும்.

பெரிய அளவிலே சமயத்தைப் பற்றிய அறிவு நல்லது.பிறகு அப்யாசம் வரை போக வேண்டும். அவர் வழியில் செல்லும் சீடர்கள், திரும்பத் திரும்ப புத்தகங்களைப் படிக்கிறார்கள்.வழிகாட்ட மகான்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆங்கிலத்தின் வழியாகத்தான் கற்க வேண்டும் என்றால், 90 சதவிகிதம் முடியும்; 10 சதவிகிதம் முடியாது.சொந்த பாஷையில் தெரிய மகான்கள் உபயோகப்படுகிறார்கள்.

இந்த வகையில் இன்றைய தினம் அவையடக்கத்துடன் பேசுகிறேன். 'மஸ்தான்' என்றால் கேட்கமாட்டாயா?



'ஒரு நொடியில்' சொத்து வரப்போகிறது; கேளுங்கள் என்றால் டிப் டாப்ஆக கவர்மெண்ட் ஆபிஸர் மாதிரி ஒன்றும் தெரியாமல் வருவான்.அவன் சொல்வதைக் கேட்கனும்.எப்படி ஒருவருக்கு அனுக்கிரகம் பண்ணுவது?

நீங்கள் மௌனமாக கோபித்துக் கொண்டு, வீட்டுக்குப் போகலாம். கலியுகத்தில் எது சாதகம், சாதகம் மகான்களுக்கு? சகஜ பாவமாகப் பழகுவது எனக்கு கேடு.

உள்ளே யான்/எனது என்ற செருக்கு இருக்கிறது. அதனைத் தான் 'ஆத்மாவின் குணம் மனம்' என்பர்.இதை கடவுள் கிள்ளி எறிந்துவிட்டால், அனுக்கிரகம் வரும். தேவர்/முனிவர் கிள்ளி எறிந்து விட்டால் பொருள் புரியும். மகான் நேரடியாகச் சொல்வார் 'தடங்களை கிள்ளி எறி!'

மகான் கிடைக்கவில்லை என்றால் சொல்வதை கூர்ந்து கவனி. மனம் ஆன்மாவின் குணம். மனத்தை திறந்து பார்! உங்கள் ஆன்மாவுக்கு நீங்களே சொல்லிப் பாருங்க! உடனே, உங்களுக்கு பூஜை பண்ணுகிற பகவான் அனுக்கிரகம் கிடைக்கும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# நல்ல காரியங்களுக்கு உகந்த தீய காரியத்திற்கு பொருத்தமற்ற

# குளிகைநேரம்

இராவணனின் மனைவி மண்டோதரி, கருவுற்று நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள். எப்போது வேண்டுமானாலும் குழந்தை பிறக்கலாம் என்ற நிலையில் இராவணன் தனது குல குருவான சுக்கிராச்சார்யாரைச் சந்தித்தான்...

யாராலும் வெல்ல முடியாத வீரமும், மிகுந்த அழகும், நிறைந்த அறிவும் கொண்ட மகனே தனக்குப் பிறக்க வேண்டும் என்று குல குரு விடம் கேட்டுக் கொண்ட இராவணன் அதற்கு வழிமுறைகள் என்ன என்றும் அவரிடம் கேட் டான்...

அதற்குப் பதில் அளித்த சுக்கிராச்சாரியார், “கிரகங்கள் அனைத்தும் ஒரே கட்டத்தில் இருக்கும் நேரத்தில் உனக்குப் பிள்ளை பிறந் தால், அந்தக் குழந்தை நீ விரும்பிய எல்லாச் சிறப்புகளும் கொண்டதாக இருக்கும்..”என்று யோசனை கூறினார்...

உடனடியாக, நவக்கிரகங்கள் அனைத்தையும் சிறைப் பிடித்து, ஒரே அறைக்குள் அடைத்து விட்டான் இராவணன்...

ஒரே அறையில் இருந்த நவக்கிரகங்கள் யாவும் தவித்துப் போயினர்...

இந்த யோசனையைச் சொன்ன சுக்கிராச்சாரி யாரைக் கடிந்தும் கொண்டனர்...

தாங்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்ப தால் நடக்கப்போகும் தீமைகளை எண்ணிக் கவலை கொண்டனர்...

அதே நேரத்தில் குழந்தை பிறக்க முடியாமல் மண்டோதரி பெருமளவு தவித்தாள்...

வலி அதிகம் இருந்த போதிலும் குழந்தை பிறக்கவே இல்லை...



இந்தச் செய்தி நவக்கிரகங்களை எட்டியதும், அதற்கும் தாங்கள்தான் காரணம் என்று இராவணன் தண்டிப்பானோ என்று அச்சம் கொண்டனர்...

இது குறித்து சுக்கிராச் சாரியாரிடம் ஆலோசனை கேட்டனர். “இந்தச் சிக்க லில் இருந்து விடுபட வேண்டுமானால், உங்கள் ஒன்பது பேரைத் தவிர, நல்ல செயல் புரியவென்றே இன்னொரு புதியவன் ஒருவனை சிருஷ்டித்து, ஒவ்வொரு நாளிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை அவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட நேரமாக மாற்றிக் கொடுத்தால், உங்களுக்கு நன்மை உண்டாகும்...

அவனை சிருஷ்டிக்கும் அதே வேளையிலேயே மண்டோதரிக்கு சுகப்பிரசவம் உண்டாகும்.

நீங்களும் இராவணின் சிறையிலிருந்து விடு தலை பெறலாம்’’ என்றார்..

சுக்கிராச்சாரியாரின் வாக்கின்படி சனீஸ்வர பகவான் சிறையில் இருந்தபடியே தனது சக்தி யால், தனது மனைவி ஜேஷ்டாதேவிக்கு ஒரு மகன் பிறக்கும் படி செய்தார்..

சனீஸ்வரன்ஜேஷ்டாதேவி தம்பதியின் புதல் வனுக்கு குளிகன் என்று பெயரிடப்பட்டது...

குளிகன் பிறந்த அதே நேரம் மண்டோதரிக்கும் அழகான ஒரு மகன் பிறந்தது...

குழந்தை பிறந்து முதன்முதலில் அழுதவுடன் ஒரு மாபெரும் வீரன் பிறந்துள்ளான் என்பதைக் குறிக்கும் வகையில் இடி, மின்னலுடன் அடர் மழை பெய்தது...

அதனால் மேகநாதன் என்று பெயரிடப்பட்டான்...

அவனே இராவணனின் தவப்புதல்வனான மேகநாதன். பின்னாளில் கடும் தவம் செய்து பிரம்மாவிடமிருந்து பல அபூர்வமான அஸ்திரங்களைப் பெற்று, இந்திரனையே வென்று இந்திரஜித் என்று அழைக்கப்ட்டான்...

இந்திரஜித் என்ற மேகநாதன் பிறந்த நேரம் தான் குளிகை நேரம் எனப்படுகிறது. தான் பிறக்கும்போதே நல்லதை நடத்தி வைத்ததால், குளிகன் நவக்கிரகங்களால் பாராட்டப்பட்டார்...

குளிகை நேரம் என்றே தினமும் பகலிலும் இரவிலும் ஒரு நாழிகை நேரம் குளிகனுக்காக வழங்கப்பட்டது...

குளிகை நேரத்தை, “காரிய விருத்தி நேரம்’’ என்று ஆசீர்வதித்தார் சுக்கிராச்சாரியார்...

அதனாலேயே குளிகை நேரத்தில் செய்யப்படும் எந்தக் காரியமும் தொடர்ந்து நடைபெற்று அந் தக் குடும்பமே செழிக்கும் என்றும் கூறப்பட்டது...

குளிர்விக்கும் தன்மை யைக் கொண்ட குளிகன் ஒவ்வொரு நாளிலும் நல்ல காரியங்களைத் தொடங்கவே உருவாக்கப் பட்டான்...

குளிகனை சனிக்கிழமைகளில் மாலை வேளைகளில் வணங்கலாம்...

சனீஸ்வரனை வணங்கும்போது மனதினில் குளிகனை எண்ணி வணங்கலாம்....

இராகுகாலம், எமகண்டத்தில் எப்படி ஒரு நல்ல செயலை செய்ய மாட்டார்களோ, அதேபோல குளி கை நேரத்தில் செய்யப்படும் எந்தக் காரியமும் திரும்பத் திரும்ப நடக்கும் என்ற நம்பிக்கை வெகு காலமாக இருந்து வருகிறது.

இதனால் நல்ல காரியங்களுக்கு குளிகை நேரம் உகந்ததாகவும், ஈமச்சடங்கு போன்ற கெட்ட காரியங்களுக்கு இது பொருத்தமில்லாததாகவும் கருதப்படுகிறது. குளிகை நேரத்தில் ஒரு காரியத்தைத் தொடங்கினால், அது வளர்ந்து கொண்டே இருக்கும் என்பது நம்பிக்கை...

குளிகை என்ற நல்ல வேளையில் சொத்து வாங்குவது, சுப நிகழ்வுகள், கடனைத் திருப்பிக் கொடுப்பது, பிறந்தநாள் கொண்டாடுவது போன் றவற்றைச் செய்வதால், அவை எந்தத் தடையும் இல்லாமல் நடப்பது மட்டுமின்றி, இது போன்ற நல்ல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டும் இருக்கும்...

ஆனால் அடகு வைப்பது, கடன் வாங்குவது, வீட்டைக் காலிசெய்வது, இறந்தவர் உடலைக் கொண்டு செல்வது போன்றவற்றை குளிகை நேரத்தில் செய்யக் கூடாது.



www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# உலகை துறந்தாலும் தாய்க்கு கடமை செய்த மகான்கள்

**எத்தனை பெரிய மகானாக இருந்தாலும், ஒரு தாய்க்கு மகனாக தனது கடமையை அவசியம் செய்ய வேண்டும், என்று நமது புராணங்கள் கூறுகின்றன. அந்தப் புராணங்களின் வழியில் பல மகான்கள் வாழ்ந்துள்ளனர். அவ்வாறு தாய்க்குரிய கடனை செவ்வனே செய்த மகான்களை இந்து மதம் மிகப் பெரிய நிலையில் வைத்து கொண்டாடியுள்ளது. அதில் மிக முக்கியமாக மூன்று பேரை குறிப்பிடலாம். 1.ஆதிசங்கரர், 2.பட்டினத்தார், 3.ரமண மகரிஷி.**



## ஆதிசங்கரர்

ஆதி சங்கரர் தாம் சந்யாசம் மேற்கொள்ள சம்மதித்தால் தாயின் இறுதி காலத்தில் மூன்று முறை சங்கரா என்றழைத்தால் எங்கிருந்தாலும் நான் வந்துவிடுவேன் என வாக்களித்து செல்கிறார்.

தாயார் 'ஆர்யாம்பாளி'ன் இறுதிக் காலம் நெருங்குகிறது. தாயும் மூன்று முறை சங்கரா என்றழைக்கிறார், சிறிது நேரம் கடக்கிறது அம்மா என்ற குரல் கேட்கிறது. 'சங்கரா வந்துவிட்டாயா அருகில் வா' என்கிறார்.

கண்பார்வை மங்கிய நிலையில் அருகில் வந்த சங்கரனை தொட்டு தடவுகிறார் தாயார். அவருடைய மனம் பதைத்துப் போகிறது. துறவறம் மேற்கொண்ட மகனின் உடம்பில் அணிந்துள்ள ஆபரணங்களின் ஸ்பரிசம் ஏற்படுகிறது. மகன் துறவறக் கடமையிலிருந்து தவறிவிட்டானோ என்று மனம் அஞ்சுகிறது, மீண்டும் அம்மா என்ற குரல் அம்மாவை அழைத்தபடி சங்கரன் வருகிறார், மகனே சங்கரா இப்போதுதான் வருகிறாயா என்று நடந்ததை சங்கரனிடம் கூறுகிறார்.

சங்கரனோ சிரித்தபடி "அம்மா நான் துறவரம் சென்றபோது நமது வீட்டின் எதிரிலுள்ள ஆலயத்தின் கிருஷ்ணனிடம் நான் வரும்வரை அம்மாவை பார்த்துக்கொள்" என்று கூறிவிட்டுப் போனேன் நான் வர தாமதமானதால் உங்கள் மனது நோகக் கூடாது என்று அந்த கிருஷ்ணனே வந்திருக்கிறான் என்றார்.

தன் தாயாரின் நெடுநாளைய ஆவலான தெய்வ தரிசனத்திற்காக தன் தபோ சக்தியால் அவருக்கு மும்மூர்த்திகளின் தரிசனம் கிடைக்கச் செய்கிறார்.

ஆதிசங்கரரின் தாயார் சமாதியும், அதில் சங்கரர் ஏற்றி வைத்த விளக்கும், தாயாருக்கு காவல் இருந்த கிருஷ்ணரின் ஆலயமும் காலடியில் இன்றும் உள்ளது.

தாயார் இறந்தபின் அவர் அருளிச் செய்த 'மாத்ரு பஞ்சகம்' என்னும் 5 பாடல்கள் தாயாரின் பெருமையை நமக்கு விளக்குகிறது.



## பட்டினத்தார்

பட்டினத்தடிகள் துறவறம் ஏற்று ஊர் ஊராகச் செல்ல (துறவி தர்மம்) நினைத்தார்.ஆயினும் தன் தாயார் 'ஞானகலை'யின் அன்பில் கட்டுண்டு ஊர் எல்லையிலேயே தங்கியிருந்தார்.

சிறிது காலத்திற்குப்பின் அவருடைய அன்னையார் மரணமடைந்தார். ஈமச்சடங்கை எங்கிருந்தாலும் வந்துசெய்து தருவேன் என்று வாக்களித்திருந்த பட்டினத் தடிகள் சரியான நேரத்தில் சுடுகாட்டினை அடைந்தார். தாயின் சிதைக்காக உறவினர்கள் அடுக்கியிருந்த காய்ந்த விறகுகளை அகற்றி விட்டு பச்சை வாழை மட்டைகளையும் இலை களையும் கொண்டு சிதை அடுக்கி பத்து ஞானப் பாடல்கள் பாடி சிதைக்கு தன்னுடைய தபோ சக்தியால் தீ மூட்டினார். அந்தப் பாடல் கள் மிகப் புகழ்பெற்றவை:

## ரமண மகரிஷி

ரமண மகரிஷியின் தாயார் 'அழகம்மாள்' தன் கடைசி காலம் முழுவதையும் ரமணருடன்தான் கழித்தார்.

ரமணர் தனது தாயாரின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்தது மட்டுமல்லாது, சுதந்திரமானதும் மகிழ்ச்சியானதுமான சூழ்நிலையை தந்ததோடு கலப்பில்லாத சத்சங்கத்தை தந்து அத்வைத ஞானத்தை போதிக்கிறார்.

தன் தாயாரின் மனதில் நிறைந்திருந்த ஜாதிபேதம், ஆசாரம் போன்ற த்வைத எண்ணங்களை மாற்றி அத்வைத்தில் மனம் லயிக்க வழி வகுக்கிறார். இறுதியில் தாயாரின் இறுதிச் சடங்கையும் நிறைவேற்றுகிறார்.

முற்றும் துறந்த சந்யாசிகளையும் தனது தாயாரை காலில் விழுந்து வணங்குமாறு நமது வேதம் கட்டளையிடுகிறது.

உலகத்தையே துறந்தாலும் பெற்ற தாய்க்கு செய்ய வேண்டிய கடமைகளை மகான்கள் செய்ய தவறியதில்லை.



# 50-ரூபாய்க்கு 50-கோடி ரூபாய் சொத்து

ஆந்திர அரசின் ஆலோசகராக இருந்த Dr.SV நரஸிம்மன் பெரியவாளை தரிசிக்க வந்தார்.

"கல்கத்தால நல்ல சென்டரான எடத்துல, நல்ல விசாலமா ஒரு வீட்டை வாங்கு. மண்டபம் வெச்ச மாதிரி வீடு. அதுல வங்காள புள்ளை கொழந்தேளுக்குன்னு தனியா ஒரு ஸாமவேத பாடசாலை ஒண்ணை ஆரம்பி! ஏதாவது வீடு இருக்கா?"

"அங்க தென் இந்திய பஜனை ஸமாஜ் இப்போ ஒரு வாடகைக் கட்டடத்ல இருக்கு. அது நல்ல சென்டரான எடம்.."

"ரொம்ப நல்லதாப் போச்சு! அந்த கட்டடத்தை வாங்கிடு! பஜனை ஸமாஜ்காரா அவாபாட்டுக்கு அதுல இருக்கட்டும்."



"அதை வாங்கணும்ன்னா நெறைய ஆகும் பெரியவா. எங்கிட்ட அவ்வளவு பணம் இல்லியே!"

"எவ்ளோவ் ஆகும்?"

"கிட்டத்தட்ட அம்பது கோடி வேண்டியிருக் குமே!.." பெரியவா உத்தரவிட்டதை நிறைவேற்ற வும் ஆசையாக இருந்தது. அதே சமயம் பணத்துக்கு என்னசெய்வது? என்ற கவலையும் சேர்ந்தது.

"நீ இப்போ நேரா மெட்ராஸ் போ! அங்க அண்ணாத்துரை ஐயங்கார்கிட்டேர்ந்து அம்பது ரூவா வாங்கிக்கோ! அது அம்பது கோடி பெறும்!" புன்னகைத்தார்.

ஐம்பது கோடிக்கு ஐம்பது ரூபாயா?

பெரியவா சொல்லி விட்டார் என்பதால் உடனே மெட்ராஸ் வந்தார். அண்ணாத்துரை ஐயங்காரிடம் விஷயத்தை சொல்லி அவரிடமி ருந்து முதல் பணமாக ஐம்பது ரூபாயைப் பெற் றுக் கொண்டு, அன்றே கல்கத்தா போய்ச் சேர்ந்தார். பஜனை ஸமாஜ் இருந்த கட்டடத்தின் சொந்தக்காரர் ஆஸுடோஷ் முகர்ஜி, பெரிய கோடீஸ்வரர். அவரை நேரில் சந்தித்து இதுபற்றிப் பேசுவதற்காக அவருடைய பங்களாவுக்குச் சென்றார் நரஸிம்மன்.

இவர் உள்ளே நுழைந்ததும் "வாருங்கள்! வாருங்கள்! உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் ஆஸுடோஷ் முகர்ஜி.

இவருக்கோ ஒரே ஆச்சர்யம்!

"நேற்று இரவு என்னுடைய கனவில் அன்னை மஹா காளி வந்தாள்! நீங்கள் குடுக்கும் பணம் எதுவானாலும் வாங்கிக் கொண்டு, அந்தக் கட்டடத்தை குடுத்து விடும்படி எனக்கு உத்தரவிட்டாள். அன்னையோட உத்தரவை நிறைவேற்ற, உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று பெங்காலியில் மிகுந்த நெகிழ்வோடு கூறினார்.

திரு.நரஸிம்மன். மானசீகமாக பெரிய வாளின் திருவடிகளை நமஸ்கரித்தார்.

என்ன லீலை இது?

"நீ இப்போ நேரா மெட்ராஸ் போ! அங்க அண்ணாத்துரை ஐயங்கார் கிட்டேர்ந்து அம்பது ரூவா வாங்கிக்கோ! அது அம்பது கோடி பெறும்"என்று கூறிவிட்டு, ஆஸுடோஷ் கனவில் மஹாகாளியாக வந்து உத்தரவையும் போட்டு, இதோ.. ஐம்பது ரூபாயில் ஐம்பது கோடி அந்தர்த்தானமானது!

பகவான் அலகிலா விளையாட்டுடை யான் என்று மஹான்கள் கொண்டாடுவார்கள். தனியாக "செஸ்"விளையாடுவது போல், பகவான் நம்மையெல்லாம் வைத்து விளை யாடிக் கொண்டிருக்கிறான். கீதையில "உனக் குண்டான கர்மத்தை செய். பலனை எங்கிட்ட விட்டுடு" என்று சொன்னதை பெரியவா ப்ரூவ் பண்ணிக் காட்டினார்.

உடனேயே மளமளவென்று காரியங்கள் நடந்தன. மூன்றே மாசத்தில் பஜனை சமாஜ் புதுப்பிக்கப்பட்டு, "வேத பவன்" என்ற பெயரில் பெரியவா சொன்ன மாதிரி ஸாம வேத பாடசாலையும் தொடங்கப்பட்டு, இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.



# வைகாசி விசாகம்



வைகாசி மாதமென்பது சூரியனின் கதிர்கள் இப்பூமியை சுட்டெரிக்கும் ஒரு காலமாகும். அதே நேரத்தில் பல ஆலயங்களில் தெய்வீக விழாக்களுக்கு மிக உகந்த மாதம் ஆகும். அதிலும் குறிப்பாக முருகப்பெருமானை வழிபடுவதற்கு ஏற்ற மாதமாகும்.

விசாகம் நட்சத்திர நாளில் தான் சிவபெருமானின் நெற்றியிலிருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகளை அக்னி தேவன் கங்கை ஆற்றில் சேர்க்க கிருத்திகைப்பெண்கள் ஆறு பேர் அந்த ஆறு தீப்பொறிகளையும் ஒன்று சேர்த்து வளர்க்க ஆறுமுகனாக வளர்ந்தார். விசாகம் நட்சத்திரம் ஆறு நட்சத்திரங்களைக் கொண்ட ஒரு நட்சத்திரக்கூட்டம் ஆகும். இந்த நட்சத்திர நாள் முருகனை வணங்கி அவனருளைப்பெற மிகச் சிறந்த நாளாகும்.

விசாக நட்சத்திர தினம் “வைகாசி விசாகம்” என்ற சிறப்புடன் அழைக்கப்படுகிறது. “விசாகன்” என்ற அரக்கனை இம்மாதத்தில் முருகப்பெருமான் வதம் புரிந்த காரணத்தால் இது முதலில் “விசாக” மாதமென்றும் பிறகு காலப்போக்கில் “வைகாசி” மாதமென மருவியதாக கூறப்படுகிறது.

நவகிரகங்களில் குரு பகவானின் அருளும், சிவனுக்கு மந்திர உபதேசம் செய்து “சிவகுருநாதன்” என்று பெயர்பெற்ற முருகப்பெருமானின் அருளும் நிறைந்த தினம் “வைகாசி விசாகம்”. இத்தகைய சிறப்பான தினத்தில் விரதம் இருந்து, முருகப் பெருமானின் ஆலயங்களுக்குச் சென்று அவருக்கு தேன், இளநீர் போன்றவற்றால் அபிஷேகங்கள் செய்து, அக்கோவிலில் சித்திரா அன்னம், தயிர் அன்னம் போன்றவற்றை தானம் அளித்து, முருக மூல மந்திரங்கள், சண்முகக் கவசம் ஆகியவற்றைப் படித்து முருகனை வணங்க வேண்டும். இப்படிச் செய்வதால் நமது மனதிற்குள்ளிருக்கும் தீய எண்ணங்கள் என்ற அரக்கனையும், வெளியில் நமக்கு கேடு நினைப்பவர்களின் பகையையும் அம்முருகப்பெருமான் அழித்து, நமக்கு நல்ல செல்வ வளத்தையும் நற்சந்ததிகளையும் நீண்ட ஆயுளையும் அருள்வார்.

❖ வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திர நாள், முருகப் பெருமான் அவதரித்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. இதனை வேனில் விழா என்றும் கூறுவர். சிம்மாசலம் என்னும் ஊரில் குன்றின் மேல் நரசிம்மர் கோயில் கொண்டுள்ளார். ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தன்றுதான் அப்பெருமானைக் காண இயலும். பிறகு சந்தனப் பூச்சு பூசி வைத்து விடுவார்கள். வைகாசி விசாகம் புத்தர் அவதரித்த நாளாகவும் கூறப்படுகிறது.

❖ சித்தார்த்தர் புத்தரானதும், நிர்வாணமடைந்ததும் இதே நாளன்றுதான். எமதர்மன் அவதரித்த நாளும் வைகாசி விசாகம் தான் என்பார்கள். இந்நாளில் எமனுக்குத் தனி பூஜை உண்டு. எம பூஜை செய்வதால் நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளுடன் வாழ லாம் என்பது மக்களின் நம்பிக்கை. வைகாசி விசாகத்தினை ஒட்டி காஞ்சி வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் கருட சேவை நடைபெறும். இந்திரன் வைகாசி விசாகத்தன்று சுவாமிமலை முருகனை வழிபட்டு ஆற்றல் பெற்றான்.

❖ திருமழபாடியில் ஈசன் வைகாசி விசாக நாளில் திருநடனம் புரிகிறார். நம்மாழ்வார் அவதரித்த நாள், வைகாசி விசாகம் என்று ஆழ்வார்திருநகரியில் வெகு விமரிசையாக விழா கொண்டாடப்படுகிறது. திருச்செந்தூரில் வைகாசி விசாகம் பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. வைகாசி விசாகத்தன்று முருகனைத் தொழுதால் பகை விலகும். துன்பம் நீங்கும். இந்நாளில் குடை, செருப்பு, மோர், பானகம், தயிர்சாதம் முதலியவற்றைத் தானம் செய்தால் மணப்பேறு கிட்டும். மகப்பேறு உண்டாகும். குலம் தழைத்து ஓங்கும் என்பது நம்பிக்கை.

❖ ஆறுமுகப்பெருமான் அவதரித்த தினமாதலின் விசாகம் விசேஷ தினமாகக் கொண்டாடப்படுகின்றது. எனவே, உலகத்து உயிர்கள் யாவும் உய்யும் பொருட்டு எம்பிரானே தந்திரு விளையாடலாற் குழந்தையான நாளாதலின் சைவமக்கள் வழிபாட்டிற்கு இந்நாள் மிகவும் சிறந்த தாகும். இத்தினத்தில் கோயில்களில் வசந்தோற்சவமும், பிரமோற்சவமும் நடை பெறும், இத்தினம் பலசமயத்தாருக்கும் ஒரு புனித நாளாகும். வைணவத்தில் நம்மாழ்வார் அவதார நாளாகவும் இந்நாள் கொண்டாடப்படுகின்றது.

❖ புத்தன் (சித்தார்த்தன்)அவதரித்ததும் (பிறப்பு) புத்தாரனதும், (திருவருள்) நிருவாண மடைந்ததும் (மறைவு) இதே திதியிற்தான் என்பர்.

❖ விசாகம், வைகாசி, அனிலநாள், சோதிநாள் எனவும்படும். இருபத்தேழு நட்சத்திரங்களில் விசாகமும் ஒன்று. சூரபதுமன் முதலான அசுரர்களின் கொடுமைகளைத் தாங்கலாற்றாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று தமது குறைகளை முறையிட்டனர். கருணையங்கடலாகிய சிவபிரான் அசுரர்களுடைய கொடுமைகளினின்று அவர்களைக் காத்தருள விரும்பினார்.

❖ தமது நெற்றிக்கண்ணின்றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தார். அவ்வாறு பொறிகளும் வாயு, அக்கினி, தேவர்களினால் கங்கையில் கொண்டு விடப்பட்டன. கங்கை சரவணப் பொய்கையில் கொண்டு சேர்த்தது. சரவணப் பூந்தடாகத்திலே ஆறு பொறிகளும் ஆறு திருக்குழந்தைகளாகி விளங்கின. விஷ்ணுமூர்த்தி கார்த்திகை முதலிய கன்னியர்கள் மூலமாக அக்குழந்தைகட்குப் பாலூட்டுவித்தார். ஆறு பொறிகளும் திருக்குழந்தைகளான தினம் வைகாசி மாதத்து விசாகநாள் ஆகும்.

❖ வைகாசி மாத சுக்லபட்ச ஏகாதசியன்று விரதம் இருப்பதால், ஆசைகள் ஈடேறி முடிவில் முக்தி கிடைக்கும். வைகாசி கிருஷ்ணபட்ச ஏகாதசியன்று விரதம் அனுஷ்டித்தால் வித்யாதானம் செய்த பலனைத் தருவதுடன் எதிர்பாரா ஆபத்துகளில் இருந்து நம்மைக் காப்பாற்றும். வைகாசி மாத அஷ்டமிக்கு சதாசிவாஷ்டமி என்று பெயர். அன்று இட பாரூடராகிய சிவமூர்த்தியை எண்ணி விரதமிருப்பர். வெறும் நீரை நைவேத்தியம் செய்து அதையே குடிக்கவேண்டும். அதன் பலனாக செய்த பாவங்கள் அனைத்தும் போகும். இந்நாளில் குடை, செருப்பு, மோர், பானகம், தயிர்சாதம் முதலியவற்றைத் தானம் செய்தால் மணப்பேறு கிட்டும். மகப்பேறு உண்டாகும். குலம் தழைத்து ஓங்கும்



என்பது நம்பிக்கை.

❖ பார்வதி மட்டுமில்லாமல் முருகனுக்கு "சஷ்டி பெண்கள் என்றும் கார்த்திகை பெண்கள் என்றும் அழைக்கப்பட்ட ஆறு தாயார்கள் இருந்தனர். அவர்கள் ஆறுபேரும் அவரது தாய்மார்களே. நட்சத்திர வரிசையில் கார்த்திகை ஆறாவது. அதேபோல, திதிகளில் சஷ்டி ஆறாவதாகும். சிவனுக்குரிய ஐந்து முகங்களும், ஞானியர் மட்டுமே தரிசிக்கும் அதோமுகத்தோடு சேர்ந்து ஆறுமுகங்கள் உண்டானது. இவருக்குரிய மந்திரம் "சரவணபவ என்னும் ஆறு எழுத்து கொண்டது. காமம் (பொருள் ஆசை), குரோதம் (கோபம்), லோபம் (கருமித்தனம்), மோகம் (பெண்ணாசை), மதம் (ஆணவம்), மாச்சரியம்(பொறாமை) என்னும் ஆறு பகைவர்களையும் அழிக்கும் படைவீரராகத் திகழ்கிறார். அந்த ஆறுமுகப்பெருமானை தரிசித்தவருக்கு வாழ்வில் என்றென்றும் ஏறுமுகம் தான்.

## முருகன் கதை கேட்ட ராம லட்சுமணன்

காளிதாசர் எழுதிய காவியங்களில் குமார சம்பவம் புகழ்பெற்றது. வால்மீகி ராமாயணத்தில் இருந்தே காளிதாசர் இந்த சொல்லை எடுத்தாண்டுள்ளார். விஸ்வாமித்திரர் பாலகாண்டத்தில் ராமலட்சுமணருக்கு முருகனின் வரலாற்றை எடுத்துச் சொல்லியதாக ராமாயணம் கூறுகிறது. குமாரசம்பவம் என்னும் இப்புனிதமான கதையைக் கேட்டவருக்கு செல்வம் சேரும். கார்த்திகேயனிடம் பக்தி வைத்தவருக்கு இப்பிறவியில் தீர்க்காயுள், மழலைச்செலவம் போன்ற பாக்கியம் உண்டாவதோடு ஸ்கந்த லோகத்தில் வாழும் பாக்கியமும் வாய்க்கும்.

❖ இந்தத் திருநாளில் "கந்த சஷ்டி கவசம்" படிப்பது அளவற்ற நற்பலன்கள் தரும்.

❖ இந்த நாளில் விரதமிருந்து வேண்டிக் கொண்டால் சொந்த வீடு வாங்கும் அல்லது வீடு கட்டும் யோகமும் ஏற்படும். மகிழ்ச்சியான திருமண வாழ்வு அமையும். அறிவு பெருகும். ஞானம் கிடைக்கும். நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் கிடைக்கும்.

## செவ்வேள் முருகன்

ஒருமுறை சிவன் தியானத்தில் இருந்த போது, அவர் மீது காதல் பாணத்தை தொடுத்தான் மன்மதன். கோபமடைந்த சிவன் நெற்றிக்கண்ணைத் திறக்க நெருப்புக்கு இரையானான். அவனுடைய கரும்பு வில்லையும், மலர் அம்பையும் அம்பிகை எடுத்துக் கொண்டாள். அவற்றை சிவனின் பாதத்தில், அர்ப்பணித்து வணங்கினாள். அப்போது, மன்மதனை எரித்த அதே கண்ணிலிருந்து ஆறுபொறிகள் புறப்பட்டன. அவை சரவண பொய்கையில் விழுந்து ஆறுகுழந்தைகள் உண்டாயின. பார்ப்பதற்கு மன்மதனைப் போலவே அவர்கள் இருந்தனர். மன்மதன் கருநிறம். ஆனால், இந்த ஆறுமன்மதர்களோ சிவப்பு நிறம். அதனால், தமிழில் மன்மதனை கருவேள் என்றும், முருகனை செவ்வேள் என்றும் குறிப்பிடுவர். "வேள் என்ற சொல்லுக்கு அழகுமிக்கவன் என்பது பொருள்.

❖ "ஓம் சரவண பவ" என்று 108 முறை சொல்வதும் நன்மை தரும். இந்தத் திருநாளில் புதுமணத் தம்பதியர் கோயிலில் வள்ளி தெய்வானை சமேத முருகருக்கு செவ்வரளிப் பூக்களால் அர்ச்சனை செய்து, உடன் தேனும் தினை மாவும் நிவேதனம் செய்தால் அறிவும் அழகும் வீரமும் நிறைந்த குழந்தை பிறக்கும். மேலும் இந்த அர்ச்சனை செய்வதால் எதிர்ப்புக்களையும் எதிரிகளையும் வெல்லும் திறனும் தைரியமும் கிடைக்கும்.







# உணவு சம்பந்தமான ஆசார தர்மம்

### உணவு உட்கொள்வதற்கு முன்பு ஏன் சித்ராஹுதி அளிக்கப்படுகிறது?

உணவால் மனம் உருவாகிறது. மனத்தால் சங்கல்ப விகல்பங்கள் (நேர்மறை, எதிர்மறை எண்ணங்கள்) உருவாகின்றன. அதன்படி கர்மாக்கள் நடக்கின்றன. கர்மத்தால் நல்ல காரியங்கள் அல்லது தீய காரியங்கள் நடக்கின் றன. தீய கர்மம் அல்லது தவறு நடப்பதால் பாவம் ஏற்படுகிறது. பாவத்தால் துக்கம் சம்பவிக்கிறது. மரணத்திற்கு பின்பு யமவேதனையை அனுபவிக்க வேண்டி உள்ளது. நாம் செய்துள்ள கர்மாக்களின் பலனை சித்ரகுப்தன் பதிவு செய்து கொள்கிறான். நம்முடைய மரணத்திற்கு பின்பு இவை யமனின் முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. அதன்படி யமதர்மராஜன் நியாயப்படியான தீர்ப்பு வழங்கி தண்டனை தருகிறார். இந்த யமவேதனையிலிருந்து தப்பிக்க, இதன் நினைவு நமக்கு எப்பொழுதும் இருக்க, உணவு உட்கொள்வதற்கு முன்பு சித்ராஹுதி அளிக் கப்படுகிறது.

### உணவு உட்கொள்ளும்போது ஏன் மௌனமாக இருக்க வேண்டும்?

உணவு உட்கொள்ளும்போது பேசுவது கூடாது என சாஸ்திரம் சொல்கிறது. உணவு உட்கொள்ளும்போது பேசுவதால் மனம் வெளிமுகமாகிறது. அதனால் நம்மிடம் ரஜதம தன்மையின் பாதிப்பு அதிகமாகிறது. இதிலிருந்து தப்பிக்க மௌனமாயிருத்தல் நல்லது. உணவு உட்கொள்ளும் சமயம் முழுவதும் இறைவனின் நாமத்தை ஸ்மரிக்க வேண்டும். அதன் மூலம் அந்த அன்னத்தில் சைதன்யம் நிர்மாணமாகிறது. இந்த சக்தி மற்றும் சைதன்யம் உள்வாங்கப்பட்டு உண்ணும் காரியமே யக்ஞ கர்மாவாகிறது. யக்ஞ கர்மாவால் உருவாகும் மனது நல்லதாக அமைகிறது. இத்தகைய மனத்தில் நல்ல எண்ணங்கள் ஏற்பட்டு நல்ல செயல்கள் நடக்கின்றன. உணவு உட்கொள்ளும்போது இறைவனுடைய நினைவில் ஆழ்ந்து, அவனுடன் உரையாடிக் கொண்டே உட்கொள்ளும்போது சைதன்ய சக்தி அதிகரிக்கிறது; இத்தகைய மனத்தில் விகல்பங்கள், தேவையில்லாத சந்தேகங்கள் எழுவதில்லை.

மேலும் விபரங்களுக்கு
பரம் பூஜ்ய பரசுராம் பாண்டே மகாராஜ்
தொடர்பு: 9380949626



# அட்சய திருதியை

## நகை வாங்க உகந்த நாள் அல்ல புண்ணியம் செய்ய உகந்த நாள்

ஒவ்வொரு வருடத்திலும் ஒருசில நாட்கள் மிகவும் புண்ணிய, புனித நாளாக விளங்குகிறது, அந்தவகையில் அட்சய திருதியை என்பது, மிகச்சிறந்த சிறப்புகள் கொண்ட தினமாக விளங்குகிறது.

சோதிடத்தின் படி ஒவ்வொரு வருடத்திலும் மூன்றரை பௌர்ணமி நாட்கள் (திதிகள்) மிக மங்களகரமானவையாகக் கருதப்படுகின்றன. இவை மூன்றரை திதிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவை:

சித்திரை மாத வளர்பிறையின் முதல் திதி "புது வருட துவக்கமாகவும்'',

ஆவணி மாதத்தின் வளர்பிறையின் பத்தாம் திதி "விஜய தசமியாகவும்'',

வைகாசி மாதத்தின் வளர்பிறையின் மூன்றாம் திதி "அட்சய திருதியையாகவும்''

கார்த்திகை மாதத்தின் வளர்பிறையின் முதல் திதி அரை திதியாகக் கணக்கில் கொண்டு "மூன்றரை 3½ முகூர்த்தங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

முதல் மூன்று திதிகள் முழுமையான திதிகளாகவும் கடைசி திதி அரைதிதியாகவும் கணக்கிடப்படுகின்றன. இவை மொத்தம் சேர்ந்து மூன்றரை முகூர்த்தத்தை வழங்குகின்றன. சோதிட சாத்திரத்தின்படி இந்நாளில் சூரியனும் சந்திரனும் சம அளவு உயரொளியுடன் விளங்கும் என நம்பப் படுகிறது.

அட்சய திருதியை நவன்ன பர்வம் எனவும் அழைக்கப் படுகிறது.

மேற்கண்ட மூன்றரை நாட்களில், இறை பாராயணம், தவம், கொடைகள், சடங்கு ரீதியான முழுக்கு, தியாகங்கள், வேள்வி செய்தல் ஆகியன செய்தால் பல்வேறு நன்மைகள் ஏற்படும்.

இந்த தினத்தில் மறுமைக்கு (மனித வாழ்க்கை முடிவுக்கு பின்) வேண்டிய செயல்களை செய்தால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒருசில காரண காரியங்களால் இம்மைக்கு (தற்போதைய வாழ்க்கைக்கு) வேண்டியவற்றை செய்தாலும் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று திரித்து கூறப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மொத்தத்தில் இது ஆன்மீக நடவடிக்கைகளுக்கே உகந்ததேயன்றி, உலகாதாயச் செயல்களுக்கு உகந்த நாள் அல்ல என்று கருதப்படுகிறது.

இருப்பினும், இந்த திதியில் உலகாதாய நடவடிக்கைகள் தொடங்குவதும் கூட சிறப்பே. ஆனால் இந்து மதத்தின் நல்ல நேரம் பார்க்கும் சோதிட சாத்திரத்தின் நேரத்துடன் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் கோள்களின் நகர்வும் அது போன்ற




அம்சங்களும் செயலைச் செய்பவருக்கு சாதகமாக இருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதுபோன்ற நல்ல நாட்களை பின்பற்றுபவர்கள் இந்தத் திதியை குருட்டுத்தனமாக அனைத்து விதமான வாழ்வுசெயற்பாடுகளைத் துவக்கவும் நடத்தவும் பயன்படுத்தக் கூடாது. இந்த நாட்களில் செய்யப்படும் செயல்களுக்கு இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்ற காரணத்தினால், முடியாத செயலை கஷ்டப்பட்டு செய்து பலனை எதிர்பார்த்து காத்திருக்கக் கூடாது.

ஆக மொத்தத்தில் இந்த அட்சய திருதியை என்பது ஒருசிறப்பு வாய்ந்த நாள் இந்த நாளில் பொன்நகைகள் வாங்கினால் சுபிட்சம் பெருகும் என்று இந்து தர்ம சாஸ்திரம் எதுவும் கூறவில்லை, தற்போது சில வருடங்களாக அட்சய திருதியை நாள் அன்று நகை கடையில் வரிசையில் நின்று நகை வாங்குவது என்பது சொல்லப்படாத, எழுதப்படாத மரபாக மாறிவருகிறது. இவை அனைத்தும் தங்க நகை வியாபாரிகள், ஊடகங்களின் உதவியுடன் நடைமுறைக்கு கொண்டு வந்தவையே.

வீட்டில் உள்ள பழைய நகையை சுத்தம் செய்து லட்சுமி, குபேரர் முன்பு வைத்து பூஜை செய்தாலே இந்நாள் விஷேஷமானதாக இருக்கும், அன்றைய தினம் கனகதாரா ஸ்தோத்திரத்தை லட்சுமி தேவியின் முன்பு பாராயணம் செய்தால் சகல ஐஸ்வர்யம் குடும்பத்திற்கு கிடைக்கும்.

மேலும் செவிவழிச் செய்தியாக, இந்த நாளில் வீட்டிலுள்ள பல்லிகள் யார் கண்ணிலும் தென்படாமல் மறைந்து விட வேண்டும் என்று வாஸ்து பகவான் கட்டளையிட்ட நாளாகவும் கூறுவார்கள்..

### இந்த சிறப்பு தினத்தில் நடைபெற்ற விஷேஷங்கள்

இந்து இதிகாசப்படி, அட்சஷய திருதியை நாளன்றே வேதவியாசர் மகாபாரத இதிகாசத்தை விநாயகரிடம் எழுதச் சொல்லி கட்டளையிட்டார்.

திருமாலின் அவதாரமான பரசுராமரின் பிறந்த நாளாகவும் கடைபிடிக்கப்படுகிறது. இன்றும் கோவாவும் கொங்கண் பகுதியும் பரசுராம சேத்திரங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

வைசாக மாதத்தின் வளர்பிறையின் மூன்றாம் நாளான அட்சய திருதியை வருடத்தின் மிகப் புனிதமான நாட்களில் ஒன்றாகக் கருதப் படுகின்றது.

பொதுவாக இந்த நாளில் திருமாலை நெல் அரிசியுடன் வணங்கியும் உண்ணா நோன் பிருந்தும் வழிபடுவர். இந்நாளில் கங்கை நதியில் நீராடுவது மிக மங்களகரமானது எனக் கருதப்படுகிறது.

காசியில் அன்னபூரணித் தாயாரிடமிருந்து, சிவபெருமான் தமது பிட்சைப் பாத்திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்ற தும் அட்சய திருதியை அன்றுதான்.

பாஞ்சாலியின் மானம் காக்க, கண்ணன் 'அட்சய' என்று கூறி பாஞ்சாலியின் ஆடை யை வளரச் செய்ததும் அட்சய திருதியை நாளன்று தான்.

வேதத்தில் அட்சய திருதியை நாளில் அறிவு பெறுதல் அல்லது கொடையளித்தல் நல்ல பலனளிக்கும் எனக் கூறுகின்றன. இது புதிய வணிகத்தினையோ அல்லது முயற்சியையோ துவங்க வெகு நன்னாளாகக் கருதப் படுகிறது. பலர் இந்த நாளில் தங்கம் அல்லது சொத்து வாங்குகின்றனர்.

மக்கள் இந்த நாளில் உண்ணாநோன்பும் பூசைகளும் கடைபிடிக்கின்றனர். விசிறி, அரிசி, உப்பு, நெய். சருக்கரை, காய்கறிகள், புளி, பழம், துணிகள் ஆகியவற்றை கொடையாக அளிக்கின்றனர். இந்த நாளில் திருமாலை வணங்குகின்றனர். தீப வழிபாடு செய்யும் போது சிலையின் மீது அல்லது அருகில் துளசி தீர்த்தம் தெளிக் கப்படுகின்றது.

வங்காளத்தில், அட்சய திருதியை நாளில், "அல்கதா" எனும் விழா கொண்டாடப்படுகிறது. அது விநாயகர் மற்றும் லட்சுமியை வணங்கி புதிய வணிகக் கணக்குப் புத்தகத்தை எழுதத் தொடங்கும் நாளாகும். வங்காளிகள் இந்த நாளில் பல சமயச் சடங்குகளையும் செய்கின்றனர்.

அட்சய திருதியை திருமணங்களுக்கு ஏற்ற காலமாகவும் கருதப்படுவதால் அந் நாளில் பெரும் எண்ணிக்கையிலான திருமணங்களும் நடத்தப்படு கின்றன.

செல்வத்திற்கு அதிபதியான குபேரரே செல்வமிக்க கடவுள் என நம்பப்படுகிறார். இந்த நாளில் குபேரர் கூட விஷ்ணுவின் மனைவியும் செல்வத்திற்கான தெய்வமான லட்சுமியை வணங்கு வார் என லட்சுமி தந்தரம் எனும் நூல் கூறுகிறது.

இந்த நாளில், குபேர லட்சுமி பூசை நடத்தப் படுகிறது. அதில் லட்சுமி உருவப்படத்துடன் குபேரரின் அடையாளமான சுதர் சன குபேர எந்திரமும் ஒன்றாக வைக்கப்பட்டு வணங்கப் படுகிறது.

# சிவப்பு மலரா? வெள்ளை மலரா?



ஞானி சமர்த்தகுரு ராமதாசர் இராம கதையை இயற்றிக் கொண்டிருந்த சமயமது, அவர் தினமும் மாலை நேரத்தில் சீடர்களிடம் அன்று அவர் இயற்றியவற்றை விளக்கிக் கூறி, அவர்களுடைய கருத்தினைக் கேட்டுவிட்டு, தேவைப்படின் திருத்தங்களை செய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்.

அதுபோன்று ஒருநாள் மாலை நேரத்தில் தான் எழுதிய சம்பவத்தை சீடர்களுக்கு ஞானி விளக்கிக் கூற ஆரம்பித்தார். அவருக்குத் தெரியாது, அன்று சீடர்களோடு ஒரு சீடராக மாற்றுருவில் ஸ்ரீபக்த ஆஞ்சநேயரும் அதனைக் கேட்டுக் கொண்டிருந்ததை!



அன்றைய நிகழச்சியில் இடம் பெற்றிருந்த நிகழ்ச்சி சீதையை அனுமன் முதன் முதலில் அசோக வனத்தில் தரிசித்தது குறித்து.

ராமதாசர் இந்நிகழ்வு பற்றிகூறும் போது அனுமன் அசோக வனத்தில் வெண்ணிற பூக்களைக் கண் டார் எனக் குறிப்பிட்டார். அப்போது சீடர் வடிவில் அனுமன் எழுந்து

"குருவே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும், ஆஞ்சநேயர் அசோக வனத்தில் பார்த்தது சிவப்பு நிறப் பூக்களைத் தான் வெண்ணிறப் பூக்களை அல்ல" என்றார்.

ஆனால் ராமதாசர் இதனை மறுத்து, "உட்கார் சீடா! அனுமன் கண்டது வெள்ளை நிறப் பூக்களைத்தான்! ஏனென்றால் அவ்விடத்தில் சிவப்பு நிற பூக்களே கிடையாது" என அடித்து கூறினார்.

இதனால் சினமுற்ற, சீடர் வடிவ அனுமன் தன் சுய வடிவைக்காட்டி... "ராமதாசரே அசோக வனத்திற்கு சென்ற நான் பார்த்தது நிச்சயம் சிவப்பு மலர்களைத்தான், அதை விட்டுவிட்டு வெள்ளை மலர் என்று எப்படி சொல்கிறீர்கள்" என்று கண்டிப்பான குரலில் சொன்னார்.

அப்போது சமர்த்த ராமதாசர் எழுந்து பக்தி பூர்வமாக அனுமனை வணங்கி விட்டு,

"இராமதாசரே! இதுவரை இராமபிரான் அருளால் எழுதி வருகின்றேன். உண்மையில் அன்று சீதாதேவி இருந்த இடத்தில் பூத்துக் கிடந்தவை வெண்ணிற மலர்கள்தான், தாங்கள் அசோகவணம் சென்றபோது பிராட்டியைச் சுற்றி இருந்த அரக்கிகள், தேவியை அச்சுறுத்திக் கொண்டே இருந்ததைக் கண்டு விட்ட தங்கள் கண்கள், கோபம் தலைக்கேறி சிவந்து போய் விட்டன. அதனால்தான் அங்கிருந்த வெள்ளை நிறப் பூக்கள் தங்களுக்கு சிவப்பு வண்ணத்தில் காட்சி யளித்துள்ளன. இதுதான் உண்மை" என பவ்யமாக எடுத்துரைத்தார்.

இந்த விளக்கம் அனுமனுக்கு நிறைவு தரவே அமைதியாக அங்கே அமர்ந்து கொண்டார்.

–ஆரூர்.
ஆர்.சுப்பிரமணியன்





# அட்சய திருதியை சூட்சும பரிகாரம்



அக்ஷய திருதியையில் சூட்சும பரிகாரங்கள் நம் கஷ்டங்கள் உடனடியாக விலக, கிரக தோஷங்கள் விலக, அக்ஷய திருதியை நாளில் செய்ய வேண்டிய சூட்சும பரிகாரத்தை பார்ப் போம்.

பூச்சி, பறவைகள், பசு, எறும்பு மற்றும் நாய் களுக்கு உணவிடுவதே சூட்சும பரிகாரமாகும். மிக சக்தி வாய்ந்த இந்த பரிகாரத்தை ஒரு நிகழ்வில் காஞ்சி மஹா பெரியவரே விளக்கியுள்ளார்.

இந்நாளில் எறும்புகள் கூடியுள்ள புற்றுகளில் சிறு சர்க்கரை அல்லது அரிசி பொடி சேர்ப்பது, நாய்களுக்கு தயிர் சாதம் அல்லது சப்பாத்தி, பசுவிற்கு அகத்தி கீரை மற்றும் பழங்கள், பறவைகளுக்கு அரிசி அல்லது தினை மற்றும் இவைகளுக்கு இந்த கோடை காலம் முழுதும் நீர் அருந்த நம் வீட்டில் ஏதேனும் வசதி செய்து கொடுத்தால் இந்த புண்ணியம் நம் வாழ் நாள் பின் தொடர்வதோடு நம் கஷ்டங்களும் கண் கூடாக விலகுவதை காணலாம்.

# சிலை வழிபாடு ஏன்?



ஆலயங்களில் உள்ள சிலைகளை வழிபாடு செய்வது பற்றி கி.வா.ஜகன்னாதன் ஒரு சொற்பொழிவில் இப்படி கூறியுள்ளார்.

"அன்றாடம் புழக்கத்தில் இருக்கு ரூபாய் நோட்டுக்களை, நாம் பார்க்கும்போதும், வாங்கும் போதும், அதனை பிறருக்கு கொடுக்கும்போது ‘அது காகிதம் தானே’ என்றா நினைக்கிறோம்? இல்லையே பணம் என்றுதானே நம்புகிறோம், நினைக்கிறோம்.

உண்மையில் அவை பணமா! இல்லையே! அவை பிராமிசரி நோட்டுக்கள்தானே... எங்கே படியுங்கள், அவற்றில் எழுதியுள்ளவற்றை "பிராமி நோட்டு இத்தனை ரூபாய்க்கு என்று போட்டு அதில் ரிசவர்வங்கி கவர்னரின் கையெழுத்து இருக்கிறது. அதுபோல ஆலயங்களில் உள்ள சிலைகளை நாம் தெய்வமாக மதித்து வணங்கினால் நிச்சயமாக அவை நமக்கு அருள் வாரி வழங்கும்.

–ஆரூர்.ஆர்.சுப்பிரமணியன்

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# aanmeegamalar.com
# இணையதளத்தின்
## mobile app

GET IT ON Google Play

அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.

ஆன்மிகமலர்

கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
**Aanmeega malar (mobile app)**
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்